ரூ. 8.00

திருவள்ளுவர் ஆண்டு 2046 மாசி
பிப்ரவரி 2015





மக்கள் சிந்தனை

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

சமய சமுதாய இலக்கிய
திங்களிதழ்

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

சிறப்பாசிரியர் : **தவத்திரு பொன்னம்பல அடிகளார்**

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின்அட்டை வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	½ பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ.	8.00
ஆண்டுச்சந்தா	ரூ.	90.00
ஆயுட் சந்தா	ரூ.	1000.00
புரவலர் கட்டணம்	ரூ.	2000.00

சந்தா – விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி:

நிர்வாகி
மக்கள் சிந்தனை
குன்றக்குடி – 630 206
சிவகங்கை மாவட்டம்
தொலைபேசி எண் : 04577 – 264227

இந்தியன் வங்கி, பிள்ளையார்பட்டி கணக்கு எண் : 554267544 மூலமும் மணியார்டர், வங்கி வரைவோலை / காசோலை மூலமும் அனுப்பலாம்.

ஆதீன இணையதள முகவரி : website : www.kkmutt.org

ஆசிரியர் : **மரு. பரமகுரு**

அச்சிட்டு வெளியிடுவோர் : ஸ்ரீ சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி

மக்கள் சிந்தனை

நிறுவனர்: தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திருவள்ளுவர் ஆண்டு 2046	மாதம் : மாசி
மலர் : 30	இதழ் : 2

மனிதர்களை உருவாக்குவோம்!

கற்பதும், கேட்பதும் சிந்தனையின் வாயில்கள்! சிந்தனை, செயல் ஆக்கம் பெற வேண்டும்! அதுவே கல்வியின் பயன்! இக்கல்வியின் பயனாகிய அறிவின் அடையாளம் இன்று பட்டங்களின் பட்டியல்கள், அலங்காரப் பேச்சுக்களின் அணிவகுப்பு, எழுதி வெளியிடும் நூல்களின் வரிசைகளில் மதிப்பிடப் படுகின்றது!

"உண்மையான அறிவு எது?" சொல்வேந்தர் சுகி.சிவம் அருமையான ஒரு கதையில் குறிப்பிடுகின்றார், ஸ்வதகேது என்பவனை அவன் தந்தை கல்வி கற்க ஒரு குருகுலத்துக்கு அனுப்புவார். குருகுலத்தின் குருநாதர் எல்லாவற்றையும் ஸ்வதகேதுவுக்கு கற்றுத் தந்தார். ஸ்வதகேதுவும் கற்றுத் தந்த அனைத்தையும் கற்றுக்கொண்டான். எனக்குத் தெரிந்த எல்லாம் உனக்கும் தெரிந்து விட்டது என்று பாராட்டி குரு அவனை அனுப்பி விட்டார்.

ஸ்வதகேதுவுக்குத் தன் கண்களில் அறிவு செருக்கு இல்லை, அறியாமையின் செருக்கு! அனைத்தும் கற்றுத் தெளிந்து விட்டோம் என்ற ஆணவப் போக்குடன் வந்தான். ஸ்வதகேதுவின் நடவடிக்கை அனைத்தும் கவனித்த அவன் தந்தை "இனி எதையுமே கற்க வேண்டிய அவசியம் இல்லாத கல்வியைக் கற்றுக் கொண்டு விட்டாயா?" என்று கேட்டார்.

"உங்கள் கேள்வி புரியவில்லையே" என்ற மகனிடம் "எதை அறிந்தவுடன் எல்லாத் துன்பங்களும் மறைந்து போகின்றனவோ அதை அறிந்து கொண்டாயா?" என்றார்.

ஸ்வதகேது தயக்கத்துடன் "எனக்குக் கற்றுக் கொடுத்தவற்றைக் கற்றுக் கொண்டேன். இதை யார் கற்றுக் கொள்வார்களோ அவர்களுக்குக் கற்றுத் தருவேன். அவ்வளவு தான் என் அறிவு" என்று தடுமாறினான்!

இது பெரிய விஷயம் அல்ல! எவரும் இதைச் செய்ய முடியும், போ உன் குருநாதரிடம் போய் எதைக் கற்றுக் கொடுக்க முடியாதோ அதை க் கற்றுக் கொண்டுவா? என்று தெளிவாகச் சொன்னார் "அப்பா, யாரும் கற்றுக் கொடுக்க முடியாத வித்தையை என் குருநாதர் மட்டும் எப்படிக் கற்றுக் கொடுக்க முடியும்?" என்று எதிர்வாதமிட்டான் மகன். அது உன் குருவின் பிரச்சனை; அவரது சாமர்த்தியம்! போ! உடனே புறப்படு! என்று மகனை விரட்டி விட்டார்.

குருவிடம் போய் ஸ்வதகேது எதைக் கற்றுக் கொடுக்க யாராலும் முடியாதோ அதைக் கற்றுக் கொண்டுவரும்படி என் தந்தை சொன்னார். எதை யாரும் சொல்லித் தரமுடியாதோ அதை நீங்கள் மட்டும் எப்படி சொல்லித்தர முடியும். இப்படி ஒரு பகுதி கல்வியில் உண்டு. என்பதை இதுவரை நீங்கள் சொல்லித் தர இல்லையே! என்று கேட்டான்.

நீயாக கேட்காத வரை இந்தப் பாடத்தை நாங்கள் கற்றுத் தர முடியாது. இதை கற்றுத் தர முடியாது! ஆனால் நீ கற்றுக் கொள்ள முடியும். அதற்கு மறைமுகமாக என்னால் உதவ முடியும் என்றார் குருநாதர்.

வழிகாட்டுங்கள் குருவே என்று மண்டியிட்டுப் பணிந்து நின்றான் ஸ்வதகேது. குருநாதர் நம் குருகுலத்தில்

பசுக்கள், காளைகள் உள்பட சுமார் நானூறு மிருகங்கள் உள்ளன. அவற்றை ஓட்டிக் கொண்டு காட்டுக்குப் போய் மனித நடமாட்டம் அற்ற இடத்தில் இந்த மிருகங்களுடன் வாழ்ந்து வா! மௌனம்! மௌனம்! மௌனமாக எதைப் பற்றியும் சிந்திக்காமல் நீ கற்ற கல்வியை இங்கேயே விட்டுப்போ, அமைதி அடையலாம்! இந்த மிருகங்கள் பல்கிப் பெருகி எப்போது ஆயிரம் ஆகின்றனவோ அப்போது திரும்பி வா! என்றார். ஸ்வதகேது மனித நடமாட்டம் அற்ற வனத்தில் விலங்குகளோடு விலங்காக வாழ்ந்தான்!

இயற்கையோடு பேசினான்!
இயற்கையைச் சுவாசித்தான்!
இயற்கையோடு இயற்கையாய்க் கலந்திருந்தான்.
தன்னை மறந்தான்!
தன் பெயரை மறந்தான்!

எல்லாவற்றையும மறந்து சலனமற்றவனாக, சஞ்சலமற்றவனாக வாழ்ந்தான். காலச் சக்கரம் சுழன்று ஓடியது. விலங்குகள்அவனுக்கு நினைவூட்டின. விலங்குகளின் மொழி ஸ்வதகேதுவுக்கு புரிந்தது! விலங்கோடு விலங்காய் மாறிப் போயிருந்தான். 1000 மிருகங்கள் ஆகிய உடன் ஆசிரமம் திரும்ப வேண்டும்! குருநாதர் கூறியது நினைவிற்கு வந்தது. ஸ்வதகேதுவுக்கு நினைவு வந்ததும் ஆயிரம் விலங்குகளோடு ஸ்வதகேது குருகுலம் திரும்புகின்றான்.

விழிகளில் ஞான ஒளி!

அமைதியான ஆன்மாவாகச் சலனமற்று, சஞ்சலமற்று நான் என்பது அற்றுப்போய் ஸ்வதகேது வருவதைக் கண்ட குருநாதர் அன்பொழுக ஆயிரத்து ஒரு விலங்குகள் வருகின்றன என்று ஸ்வதகேதுவை சுட்டிக் காட்டிக் கட்டி அணைத்துக் கொண்டார்.

யான், எனது என்பது அற்றுப்போய் உள்ளிருக்கும் ஒளியை உணர்வதே ஞானத்தின் தேடல்! தண்ணீர்த் துறையைக் கடக்க, படகில் பயணித்த நான்கு பேர் படகு தரையைத் தொட்டப் பிறகு, படகைத் தலையில் சுமந்து சென்றனர்! ஏன் படகைத் தண்ணீரில் விட்டுவிடாமல் தலையில் சுமந்து வருகின்றீர்கள் எனக் கேட்டதற்கு, படகு தண்ணீரைக் கடக்க உதவியதற்கு நன்றி காட்ட வேண்டாமா? என்று கேட்டார்கள். கற்றதைக் கேட்டதைச் சிந்தித்து செயல் ஆக்காதவர்கள் இப்படித்தான் தண்ணீரில் மிதக்கும் படகைத் தரையில் தலையில் சுமக்கும் பயனற்றவர்கள் ஆவர்.

எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.

என்றார் திருவள்ளுவர். உலகத்தோடு இயைந்து வாழச் சொன்னார். சரியான வினாக்கள் சரியான விடைகளைத் தேடத் தூண்டும். தேடல் மதிப்பெண்களுக்காக மட்டும் அல்லாமல் வாழ்க்கையைச் செம்மையாக ஆக்குவதாக அமைய வேண்டும்.

இன்று கல்வித் தளத்தில் என்ன நிகழ்கின்றது? ஒரு கல்லூரி வளாகத்தில் கல்லூரி முதல்வரை, பயிலும் மாணவன் கொலை செய்து விடுகிறான். பள்ளி வளாகத்தில் வகுப்பு ஆசிரியையை மாணவன் கொலை செய்து விடுகின்றான். பள்ளி வளாகத்தில் சக மாணவியை, சக மாணவன் கொலை செய்து விடுகின்றான். கல்விக் களம் ஏன் கொலைக் களமாக மாறிப் போனது?

அறிவு ஆயுதத்தை தீட்ட வந்தவர்கள்
ஏன் ஆயுதத்தைத் தீட்டுகின்றார்கள்?
சிந்திக்க வேண்டும்!

அறம் சார்ந்த சிந்தனைகள் (நீதிபோதனை வகுப்பு) நம் வகுப்பறையை விட்டு வெளியேறி விட்டதே!

கற்றல் என்பது வகுப்பறைக்குள் மட்டும் அல்ல! வாழ்க்கை முழுவதும் நிகழ்கின்றது! தாயின் தாலாட்டைக் கேட்பதிலிருந்து குழந்தை ஒவ்வொன்றையும் உற்று நோக்குகின்றது. ஏன் கருவிலேயே கற்றல் தொடங்கி விடுகின்றது.

அரிச்சந்திர நாடகத்தைப் பார்த்த மோகன்தாஸ், ஆசிரியர் தூண்டியும் பொய்பேசாத, தவறு செய்யாத வாய்மையே பேசும் சத்தியவந்தனாய் மகாத்மாவாய் உருவு எடுத்தாரே! அந்த நிலை நீடித்து இன்று வலிமை பெற வேண்டும்.

பொய் பேசாதே என்று அறச் சிந்தனை ஊட்டி வளர்க்கப்படும் குழந்தை, எப்பொழுது முச்சந்தியில் நின்று பொய் பேசும்?

புறம் பேசாதே என்று வளர்க்கப்படும் குழந்தை எப்படி வீதியில் நின்று புறம்பேசும்?

கள் உண்ணாதே என்று வளர்க்கப்படும் குழந்தை வீதியில் நின்று எப்படி மதி மயங்கி விடும்?

அறச்சிந்தனை ஆன்மாவின் அடித்தளத்தில் இங்கு வளர்க்கப்பட வேண்டும்!

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்

– என்ற குறளுக்கு ஏற்ப, வரும் துன்பம் அறிந்து வளரும் தலைமுறையை செம்மைப் படுத்திட வேண்டும்!

மருத்துவரை, பொறியாளரை, சட்ட வல்லுநரை, தொழில் முனைவோரை. துறை நிபுணர்களை உருவாக்கித் தரும் கல்வி, முதலில் மனிதர்களையும் உருவாக்கித் தரவேண்டும்.

மனிதத்தை உருவாக்குவதே
உண்மையான கல்வியின் பயன்.

மனிதர்களை உருவாக்கும் கல்வியை உருவாக்குவோம்!

என்றும் வேண்டும் இன்பம் அன்பு

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருவாசகத் தேன்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

சிவபதமும் அளித்த செல்வம்!

மானிட வாழ்வு, காலத்தினால் இயக்கப்படுவது. காலம் என்ற நியதி மானிட வாழ்வுக்கு இயற்கையாய் அமைந்தது; தவிர்க்க முடியாததும் கூட! மாணிக்கவாசகர், வாழ்க்கையின் போக்கைப் "பொய்யினைப் பெருக்கிப் பொழுதினைச் சுருக்கி" என்று குறிப்பிடுகின்றார். ஆன்ம வாழ்க்கையின் அருமைப்பாட்டை அறியும் அறிவும் அதனை உரிய காலத்தில் உரியவாறு பயன்படுத்துவது பற்றிய அறிவும் நமக்கு வரவேண்டுமானால் நாள்தோறும் கிழிக்கும் நாட்காட்டியை (Calender) வைத்துக்ொகள்வது நல்லது. இந்த நாட்காட்டி ஜனவரி முதல் தேதி கனமாக, புதியதாக, பொலிவாக விளங்கும். நாள் ஆக, ஆக இளைத்து டிசம்பர் 31-ம் தேதி முற்றாக இதழ்கள் இல்லாமல் போய் வெறும் அட்டையே மிஞ்சியிருக்கும். எடை குறைந்துவிட்டது; அழகு போய்விட்டது. அது போலத்தான் மனிதன் குழந்தையாகப் பிறக்கின்றான்; சிறுவனாக ஓடி விளையாடுகிறான்; இளைஞனாகிறான்; முதியவன் ஆகிறான்; கிழவன் ஆகிறான்; கடைசியில் மூளையில் இயக்கம் ஒய்கிறது. மூச்சு நின்றுபோகிறது. இந்த நிலை ஒரு நாளில் எய்துவதில்லை. காலம் காட்டும் கருவி–கடிகாரம் டிக் டிக் என்ற சப்தத்துடன் நகர்கிறது. முள்ளா நகர்கிறது? மனிதனின் வாழ்வு நகர்கிறது. இறுதி நிலை நோக்கி நகர்கிறது.

காலத்தின் நில்லாமையை அப்பரடிகள் விளக்கும் முறை எளிதில் விளங்குவதாய் அமைந்துள்ளது. கைகள் இரண்டையும் இணைத்து ஒரு தடவை உற்று நோக்குங்கள். விரல்களுக்கிடையில் ஓட்டைகள்! கைகள் இரண்டால் தண்ணீரை அள்ளி ஓட்டைப் பானையில் ஊற்றிக் குடத்தை மூடித் தண்ணீரைக் காப்பாற்ற நினைத்த மனிதனின் மனப்பாங்கினை ஒத்தது மனிதன் காலத்தை அனுபவிக்கும் பாங்கு என்று விளக்குவார்.

கோடி தீர்த்தம் கலந்து குளித்தவை
ஆடி னாலும் அரனுக்கன் பில்லையேல்
ஓடும் நீரினை ஓட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே!

(அப்பரடிகள் – தேவாரம்)

"நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாளது உணர்வார்ப் பெறின்"

என்றது திருக்குறள்.

ஒரு மரம் ஒரே அறுவையில் விழுந்துவிடுவதில்லை! பல அறுவைகளால் நூல் நூல் அளவாக அறுபடுகிறது. அப்படித்தான் வாழ்க்கையும் ஒரு நாளில் முடிவதல்ல. பல நாட்கள் கழிந்த பின்னேயே முடிகிறது. "காலம்" என்ற நியதி கடவுள் திருவுள்ளத்தின் வழி அமைந்தது. ஏன்? உயிர்களின் மேம்பாட்டை ஒரு வரையறுத்த காலத்துக்குள் முடிக்கவேண்டும் என்பது இறைவனின் திருவுள்ளம்! இல்லையெனில் உயிர்கள் – மனிதர்கள், "இன்று நன்று; நாளை நன்று" என்று பேசியே காலங் கடத்திவிடுவர். "நாள் பார்த்தல்" என்ற மரபு நாளைக் கணித்தல், நாளைப் பாதுகாத்தல் என்ற அமைவிலேயே தொடங்கியது. ஆனால் காலப்போக்கில் "நல்ல நாள்" "கெட்ட நாள்" என்ற சித்தாந்தம் தொடங்கிவிட்டது. இதன் காரணமாக வாழ்நாள்கள் வீழ்நாள்களாகவே போகின்றன. காலம் வீணாவதைத் தவிர்க்கவே "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்று ஒரு பழமொழி ஏற்பட்டது. இது ஒரு அனுபவ ஞானமொழி. ஆனால், இன்றைய மானுடச் சந்தையில் இந்தப் பழமொழிக்கு வழங்கும் பொருள் வேறு. உடம்பில் உயிர்க் காற்று இயங்குவது வாழ்தலுக்கு அடையாளம்! அந்தக் காற்றோட்டம் தடைப்படும் முன் பாவத்தைத் தூற்றிவிட்டுப் புண்ணியத்தை எடுத்துக்கொள் என்பது தான் இந்தப் பழமொழியின் உண்மையான பொருள். வாழ்க்கைச் சந்தையில் "பொருள் சுருட்டுவதற்கு நேரம் வந்துழி சுருட்டிக்கொள். ஒரு தரம் கிடைத்த வாய்ப்பு மறுதரம் கிடைக்காது" என்பர். ஆனால் நாட்டிலோ வயது கழிவதை வளர்கிறது என்று குறிப்பிடுகின்றனர். ஆம்! உடல் வளர்கிறது! ஆனால் வாழ்க்கை நாள் குறைகிறது. வாழ்க்கையின் படிகளில் மனிதன் வெள்ளி விழா, பொன் விழா, மணிவிழா, முத்து விழா என்றெல்லாம் கொண்டாடி மகிழ்கிறான்! அவன் எடுத்துக்கொண்ட விழா, வயதுக்கா? அல்லது பொன்னும் மணியும் போன்ற சாதனைகளுக்கா? வரலாறுதான் கூறவேண்டும்!

யாருடைய வாழ்க்கையில் பொய்ம்மை பெருகுகிறது? பொழுது சுருங்குகிறது, மூளைப் புலன்கள் இயங்கவில்லை! அறிவு இல்லை! ஆள்வினைத் திறம் இல்லை! இரத்த அணுக்கள் மட்டுமே நெளியும் தலை! அதிலும் வெள்ளை அணுக்கள் மிகுதியாக நெளியும் தலை! இந்நிலைக்கு மாற்று என்ன? மருந்து என்ன? அன்புதான் மாற்று! மருந்து! "அன்பலால் பொருளும் இல்லை ஐயன் ஐயாற்னார்க்கே!" என்பார் அப்பரடிகள். மானிட மூளையில் புலன்கள் பல உண்டு. இப்புலன்கள் அனைத்தும் முறையாகத் தூண்டி வளர்க்கப் பெறுதல் வேண்டும். அது நடைபெறுவதில்லை. இன்றைய கல்விமுறை நினைவுப் புலனையும், சமுதாயம் தேவைப் புலனையும் தொட்டுத் தூண்டி விடுகின்றன. ஆனால், சிந்தனை, படைப்பாற்றல், அன்பு முதலியன தூண்டி வளர்க்கப்பெற்றால் வையகம் வளரும்; வாழும். இறைவனை அடைவதற்கு அன்பே தேவை. அம்மையும் அப்பனுமாக ஆட்கொண்டருளும் ஈசன் கூட அன்பின் வலைக்குள்தான் அகப்படுகின்றனர். சிவபோகம், பெருமானின் கருணையினால் விளைவதன்று. ஆன்மாவின் அன்பினில் – ஆற்றல் மிக்க அன்பினில் விளைவதே சிவபோகம்! அம்மை சிவசக்தி ஆன்மாவுக்கு வாழ்க்கையில் விருப்பத்தை உண்டாக்குகிறாள். ஆன்மாக்கள் வாழ்தல் வேண்டும்; நன்றாக வாழ்தல் வேண்டும். வாழ்வதற்குரிய பொன் வேண்டும் என்பதனாலேயே அன்னை பராசக்தி – சிவசக்தி, காமாட்சியாக விளங்குகிறாள். அதனாலேயே அவள் காமாட்சி என்று அழைக்கப்படுகிறாள்! அன்னை காமாட்சியின் கையில் கரும்பு வில்! ஏன் கரும்பு வில் காமத்தின் சின்னம்! சிவம் – பரமசிவம் துணையாக இருந்து துறப்பிப்பது! அப்பன் சிவம், ஒளிபெருக்கும் சிவம்! ஞான ஒளி! செம்மை! அனைத்து நலன்களும் சேர்ந்தது செம்மை! இம்மை, மறுமை நலன்களை வழங்கும் செல்வம்! "செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே!" என்று திருஞானசம்பந்தரும் அருளிச் செய்தார்.

"செத்த பிறகு சிவலோகம்" என்பது பித்தர் கூறும் வார்த்தை! இங்கேயே இன்ப அன்பு கிடைக்கும்! இங்கேயே வாழலாம்! இம்மையே நன்மை தருவார்! இப்பிறப்பிலேயே இன்பம்! இந்த மண்ணிலேயே விண்ணகம்! இந்த மண்ணில் விண்ணரசு என்பதே மானிட வாழ்வின் இலக்கு! அதனாலன்றோ சிவன், இந்தப் புவிக்கோளத்தைச் சுற்றி வருகிறான்! மனிதன் பின்னே நடந்து வருகிறான். சிவம் ஆட்கொள்ளும் களம், இந்த பூமிதான்! திருக்குறள் கடவுள் வாழ்த்தில்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்கிறது. இதில் மரபு வழி காணும் பொருள் நிற்கப், புதிய கோணத்தில் பார்க்கலாமே! பழைய காலத்தில் "அ" எழுத்து பெரியதாக இருக்கும். "அ" என்ற எழுத்தின் மேற்பகுதியில் ஒரு புள்ளியில் தொடங்குகிறது. அந்த வட்டமானது கோணல் இல்லாதது. கோணல் இல்லாத வட்டம் "குறைவிலா நிறைவைக்" குறிக்கும். அது பரம்பொருள் – சிவம்! அந்த வட்டத்திலிருந்து எழுத்து தொடங்கி கீழிறங்குகிறது. இது, பரமசிவம் உயிர்களை நோக்கி இறங்கி வருவதை புலப்படுத்துகிறது. "அ" எழுத்தின் கீழ்ப்பகுதி வளைவுள்ளது; நடுப்பகுதி தொந்தி போல வளைந்து தொங்கும். இந்தப் பகுதி உயிர் தன் முனைப்பில் வாழ்க்கையை நடத்தும் பாங்கைக் குறிப்பது. பின் எழுத்து வளைந்து மேல் நோக்குகிறது. மேல் நோக்கும் மையத்தில் எழுத்து தடித்து இருக்கிறது. மெல்லிய கோடு இந்த ஆணவம் அடங்குதலைக் காட்டுகிறது. குறிக்கோள் சார்ந்த வாழ்க்கை கூர்மைப்படுத்தப்படுகிறது. இதுவரையில் உயிருக்கே உரிய அறியாமையைத் தொடர்ந்து வந்து உயிருக்கு நுகர்வனவெல்லாம் அருளிப் பக்குவப்படுத்தி வந்த சிவம், இந்த இடத்தில் உயிரை முந்திச் சென்று வழிகாட்டுகிறது. அழைத்துச் செல்கிறது. "அ" எழுத்தின் மேற்பகுதி நேர்கோடு, சிவம், உயிரை, பிறவியென்ற வளையத்திலிருந்து விடுதலை செய்து இன்ப அன்பில் திளைக்க வைக்கிறது. அதன் அடையாளம் "அ" என்ற எழுத்து வளைவுகளைக் கடந்து நேர் கோட்டில் முடிகிறது. சிவம் உயிர்களை ஆட்கொண்டருளும் பாங்கினை எடுத்துக்காட்ட இது ஒரு எளிய விளக்கமாகும்.

மாணிக்கவாசகர் அமைச்சராகப் பணி செய்தார்! அவர் தம் அமைச்சுப் பணி சிறப்பாகவே அமைந்திருந்தது.

"எக்கோலம் கொண்டால் என்ன
ஏதவத்தைப் பட்டால் என்ன
முத்தர் மனமிருக்கும் மோனத்தே"

என்றபடி மாணிக்கவாசகரின் மனம் அமைச்சுப் பணியில் இருந்தபொழுதும் இறை வாழ்க்கை நடத்தினார்; சிவசிந்தனை மறவாமல் இருந்தார். அவர்தம் வாழ்க்கையே தவமாக விளங்கியது.

அரிமர்த்தன பாண்டியன், போருக்காக அரசுக்கு குதிரைகள் வாங்க எண்ணினான். கிழக்குக் கடற்கரையில், அரபு நாட்டுக் குதிரைகள் வந்திருப்பதாகவும் செய்திகள் கிடைத்தன. அரசன், அமைச்சர் வாதவூரரை அழைத்துக் குதிரைகள் வாங்கிவரும்படி பணித்தான். அறநெறியில் வளர்ந்து, சமுதாயச் சிந்தனையில் தழைத்து தவத்தில் முதிர்ந்திருந்த வாதவூரருக்குக் குதிரை வாங்குவதில் விருப்பமில்லை. ஏன்? குதிரைகள் அழகுக்குப் பயன்படும். அல்லது போருக்குப் பயன்படும். போர், மனித உலகத்திற்குத் தீயது. எந்தச் சூழ்நிலையிலும் போரைத் தவிர்க்க வேண்டும். அரசுக்கு மக்கள் வரி செலுத்துவது ஆள்கிறவர்கள் ஆரவாரத்துடன், ஆடம்பரமாக வாழ்வதற்கு அல்ல, மக்கட் சமுதாயத்தின் தேவை பலப்பல! ஒவ்வொருவரும் ஒவ்வொரு குடும்பமும் தனித்தனியே அந்தத் தேவைகளை நிறைவு செய்துகொள்ள இயலாது. கல்வி, மருத்துவம், காவல், பாதுகாப்பு, உத்தரவாதம் போன்றவற்றை அரசுதான் செய்ய இயலும். ஏன்? அரசிடம் மட்டுமே தொகுப்பு நிதியம் இருக்க வாய்ப்பு இருக்கிறது; மேலாண்மையும் இருக்கிறது. அதனாலேயே "நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே" என்று புறநானூறு பேசுகிறது. ஆதலால், வாதவூரருக்குக் குதிரைகள் வாங்க தொடக்க நிலையில் முழு விருப்பம் இல்லை. ஆயினும் அரசின் ஆணையை மேற்கொண்டு கிழக்குக் கடற்கரையில் உள்ள திருப்பெருந்துறைக்கு வருகிறார். திருப்பெருந்துறையை அணுக, அணுக வாதவூரரின் சிந்தனை வளர்கிறது. குதிரைகள் வாங்க மனம் ஒருப்படவில்லை. இதற்கு முதற் காரணம் தவம் பயந்த நெஞ்சம்! குதிரைகள் வாங்குவதற்குப் பதிலாகத் திருக்கோயில் கட்டுகிறார், அரசின் பணம் அரசின் ஆணை குதிரைகள் வாங்கவேண்டும் என்பது! ஆனால் வாதவூரர் திருக்கோயில் கட்டுகிறார்! இதற்கு முதற் காரணம் சிவம் ஆட்கொண்டருளியதால் ஏற்பட்ட மாற்றம் மட்டும் அல்ல. குதிரைகள் வாங்கினரல் போருக்கு மட்டுமே பயன்படும். திருக்கோயில் கட்டினால் மக்கள் வழிபட்டு இன்புறுவர்; சிற்பம் வளரும்; ஓவியம் வளரும்; இசை வளரும்; வேலை வாய்ப்புப் பெருகும். ஆதலால், சமுதாயத்தின் மையமாக விளங்கும் திருக்கோயில் கட்டினார். அரசன் ஆணை என்னாவது? வாதவூரர் முதலமைச்சர்! அரசனால் மதிக்கப்பெற்ற முதலமைச்சர்! ஆதலால் வாதவூரரின் எண்ணம் அரசன் செய்யும் பணியின் நன்மை நோக்கி ஏற்பன் என்பது. ஆனால், அரசன் வாதவூரர் செயலை ஏற்றுக் கொண்டானில்லை. வாதவூரர் தண்டனைக்கு ஆளாகிறார். வாதவூரருக்காக இறைவனும் தண்டனை - பிரம்படி பெறுகிறான்.

அருட்செல்வம் நாடிய மாணிக்கவாசகர் ஆட்சியில் பொருளும் பயனும் அன்பில் மாறாமல் இருந்ததால் இந்த மடை மாற்றம்; அவர்தம் அன்பினில் சிவம் விளைந்தது! அன்பும் சிவமும் கலந்த மாணிக்கவாசகரால் திருவாசகம் விளைந்தது! திருவாசகம் நம்மனோர் இதயத்தில் இருளகற்றி இன்பம் விளைவிக்கிறது.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே!

(பிடித்தபத்து - 3)

கவியரசர் அர. சிங்காரவடிவேலன் மறைவு

கண்டனூர் கவியரசர் அர. சிங்காரவடிவேலன் 10.02.2015இல் காலமானார். இவர் ஒரு பிறவிக்கவிஞர்; திருமுருகன் மீது தீராக் காதல் கொண்ட திருவினர். தேவகோட்டை சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் தமிழ்த்துறை தலைவராக அமர்ந்து பணிசெய்த தமிழ்ப் பேராசான். இவர்தம் கவியரங்க முழக்கம் தனிச் சிறப்புடையது. செட்டிநாட்டுக் கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர். இவர்தம் மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தின் "கவியரசர்" பட்டம் பெற்ற இப்பெருங்கவிஞர் மறைவு குறித்து "மக்கள் சிந்தனை" வருந்துகிறது. இவரை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் இவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறது. கவியரசரின் நல்லுயிர் திருமுருகன் திருவடியில் இன்ப அமைதி பெற இறைஞ்சுகிறது.

- ஆசிரியர்

சிலம்பின் கொழிப்பு எது?

(தமிழாகரர். தெ. முருகசாமி)

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தின் நீதிகளாக அதன் பதிகத்தில் மூன்று கூறப்பட்டுள்ளன. அவை,

அரசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்து வந்தூட்டும் என்பதூஉம்

ஆகும். பதிகத்தில் கூறப்பட்ட இவை சிலப்பதிகாரத்தின் கொழிப்பான சாரம்போல் காணப்பட்டாலும் இவைகளை இளங்கோவடிகள் கூறினாரா? எனக் கருதுவதில் ஐயங்கள் உள்ளன? இருப்பினும் எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி இளங்கோவடிகளாலே கூறப்பட்டதாக உணரப்படும் நீதிகளின் அடுக்கு ஒன்று நூலின் இறுதியில் வரந்தரு காதையில் உள்ளது. அதில் 22 நீதிகள் அடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் தெய்வம் தெளிமின், தெளிந்தோர்ப்பேணுமின் என்பன சிந்தனைக்குரியனவாக உள்ளன.

கடவுளைத் தெய்வம் எனச் சுட்டினாலும் அத்தெய்வம் என்ற சொல் கடவுளையன்றி வேறொன்றைச் சுட்டுவதாக இளங்கோவடிகள் வரந்தரு காதை இறுதியில் தெய்வம் தெளிமின் என்றதோடு தெளிந்தோர்ப் பேணுமின் என்றார் என்பதைத் தெளிவுறுத்துவதே இக்கட்டுரையின் கருதுகோள்.

தெய்வம் என்ற சொல்லைப் பலரும் கடவுளைச் சுட்டும் நிலையிலேயே பெரும்பாலும் கூறியுள்ளனர். அதனை வழிமொழிபவராகவே இளங்கோவடிகளும் தெய்வமும் உண்டுகொல், தெய்வமும் உண்டுகொல் என்றும் வம்பப் பெருந்தெய்வம் என்றும் கானுறை தெய்வம் என்றும் பலவாறாகக் கூறுகிறார்.

இவ்வாறே இளங்கோவடிகளுக்கு முன்னோராகிய தொல்காப்பியரும் தெய்வத்திற்குக் கடவுள் என்ற பொருளைப் பல இடங்களில் சுட்டுகிறார். கருப்பொருள்களுள் ஒன்று தெய்வம், தெய்வம்

அஞ்சல் என்றும் வழிபடு தெய்வம் என்றும் மெய்ப்பாட்டியலிலும் (24) செய்யுளியலிலும் (110) கூறுகிறார்.

இருப்பினும் வள்ளுவர் தெய்வத்தைக் கடவுள் என்று கூறியதோடு "தெய்வத்தான் ஆகாது எனினும்" என்று, ஆள்வினை உடைமை அதிகாரத்தில் ஊழ்வினை என்ற கருத்தில் கூறியுள்ளார். இவ்வாறே தொல்காப்பியரும் ஒரோவழி தெய்வம் என்பதை ஊழ்வினையின் மறுவாசிப்பாகவே ஓரிடத்தில் கூறுகிறார். இங்ஙனமாகத் தொல்காப்பியரும் திருக்குறளும் தெய்வத்தைச் சிறுபான்மையளவில் ஊழ்வினைச் சுட்டும் பாங்கிலேயே இளங்கோவடிகளும் சிறுபான்மையாக ஊழ்வினையைச் சுட்டுகிறார். அந்த் ஓரிடமே தெய்வம் தெளிமின் ஒன்றதாகும்.

சிலம்பில் பலதெய்வங்கள் சுட்டப்பட்டுள்ளன. இளங்கோவடிகள் கூற்றுப்படித் தெய்வம் தெளிமின் என்றால் எல்லாத் தெய்வங்களையுமா? அல்லது ஒரு தெய்வத்தையா? எந்தத் தெய்வமானாலும் வணங்குதற்குரித்தானதால் வணங்குமின் எனக் கூறாமல் தெளிமின் என்றதை நுட்பமாக உணரவேண்டியுள்ளது.

ஏனெனில் வணங்குவதாயின் சுட்டி உணரும் ஒரு பருப்பொருள் உரு வேண்டும். ஆனால் தெளிமின் என்றதால் கண்களாலன்றிக் கருத்தால் தேர்ந்து தெளிதலாக இருக்கவேண்டும் என்பது கருத்து. இந்நிலையில் கண்களாலும் கருத்தாலும் உணர்தலான இருவேறு நிலையைக் கவுந்தியடிகளைக் கொண்டே இளங்கோவடிகள் தெய்வத்திற்குப் பொருள் , கூறுவார்போலக் காப்பியத்தை நகர்த்துகிறார்.

அருகதேவன் உருவையே தெய்வமாகக் கண்டுவணங்கும் கவுந்தியடிகள் கண்ணகியைக் கற்புடைத் தெய்வம் என்றார். இக்கூற்று அருகதேவனுக்கு ஒத்ததாகக் கூறப்படவில்லையானாலும் தெய்வம் எனக்கூறப்பட்டதை வாளா ஒப்புக்காகக் கூறப்பட்டதாகக் கருதமுடியாது. ஏனெனில் இதனைக் கூறியவரோ சராசரி மனிதரினும் மேம்பட்டவர் என்பதால் அவர் கூற்று சிந்தனைக்கு விருந்தாகிறது.

கண்ணகி பின்னர் உரைசால் பத்தினிக் கடவுளாக மாறப்போகிறாள் என்பதற்காகக் கூறப்பட்ட அச்சாரமாக இப்புகழுரை அமைந்தாலும் ஊழ்வினை படிந்த ஒருத்தியாகவே அவளது தோற்றம் சித்தரிக்கப்படுகிறது என்பது கருத்தாகும். ஏனெனில் ஊழ்வினைத் தொடுப்பிலேயே தமிழ் மண்ணுலகிற்கு வந்தவள் கண்ணகி. அவளுடன் கோவலனும் வந்தவன்.

ஊழ்வினை படிந்த அளவிலேய சோழநாட்டை விட்டுப் புறப்படுகையில் வழியில் கவுந்தியடிகளைச் சந்தித்து வணங்குகின்றனர். அவர்களைப் பற்றி முன்னர் அறியாத அடிகள், தவ ஆற்றலால் முக்காலமும் அறிந்தவராதலால் அவர்களைக் கண்ட மாத்திரத்தே ஊழ்வினை சூழ்ந்தவர்களாகத் தெரிந்த அவர்களிடம்,

உருவும் குலனும் உயர்பேர் ஒழுக்கமும்
பெருமகன் திருமொழி பிறழா நோன்பும்
உடையீர்!

என விளித்து, "என்னோ உறுகணாளரின் கடை கழிந்து இங்ஙனம் கருதியவாறு". என வினவினார். ஊழ்வினை படிந்திருந்த அவர்களின் புறத்தோற்றமே கவுந்தியடிகளைத் தீவினை பிடித்தவர்களைப் போல வந்துள்ளவர்களே (உறு கணாளரின்) என வினவச் செய்தது.

மேலும் இதன் தொடர்ச்சியாகவே கவுந்தியடிகள் தெளிவடையுமாறு கோவலன் – கவுந்தியடிகளிடம் கூறிய "உரையாட்டில்லை" என்ற பதில் அமைந்தது. நான் உரிய பதில் ஒன்றும் கூற விரும்பவில்லை எனக் கோவலன் கூறியது. அடிகட்கு அவ்விருவர்மீதும் ஊழ்வினை படிந்துள்ள உண்மையை உறுதிப்படுத்தியது. அதனாலே அடிகள் "இவ்வழியைக் கடந்து செல்லல் அரிது என யான் உங்கட்குக் கூறுவதால் பயனில்லை, ஊழ்வினைப் பயனை நீக்கவும் யாராலும் முடியாததால் சோர்வடையாமல் பயணிப்போமாக!" என ஆறுதல் கூறினார்.

தொடர்ந்த பயணத்தில் புறஞ்சேரிப் பகுதியில் தங்கிய போது கோவலன் மதுரையைப் பார்த்துவர புறப்பட்ட நிலையில் அடிகளிடம் அவன் கண்ணகியைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு பணிந்து வேண்டினான். அதற்கு அடிகள்,

"காதலி தன்னொடு தவம்தீர்
மருங்கின் தனித்துயர் உழந்தோய்" என விளித்து,
"தாமுறும் துன்பமெல்லாம் தொன்றுபட வரூஉம்
தொன்மைத்து"
என உணர்த்திவழியனுப்பினார்.

இங்ஙனமாகத் தொடர்ந்து அடிகள் கூறுவதெல்லாம் ஊழ்வினையைப் "பால்வரை தெய்வம்" எனத் தொல்காப்பிய வழிச் சிலம்பில் "தெய்வம்" என்ற சொல்லுக்குப் பொருளுணருமாறுள்ளது எனலாம்,

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப" (களவியல் 2)

என்ற நூற்பாவுக்கு உரை எழுதிய இளவழகனார், "ஒன்றியிருக்கவும் வேறாக ஆக்கவுமாகிய இருவகை ஊழ்களுள் பலபிறவிகளில் ஒன்றியிருக்கும்படிச் செய்த ஊழால் இருவரும் கல்வி, அன்பு நிலைகளில் ஒத்தவர்களாகச் சந்திக்கும்படி அமைய" என்பதாக அரியதோர் கருத்தைக் கூறியுள்ளார். இதில் ஊழ்வினை என்பது, என்றும் உள்ளதான தொடர்ச்சி என்பதாகக் கூறப்பட்ட உண்மை பதிவாகியுள்ளதை உணரலாம். இதனையே நச்சினார்க்கினியர் என்னும் உரையாசிரியர் "பால்வரை தெய்வம்" என்றார்.

இப்பால்வரை தெய்வத்தின் படியே கண்ணகியும் கோவலனும் சோழநாட்டில் பிறக்கின்றனர். பாண்டிய நாடும் பாண்டியனும் அழிய பால்வரை தெய்வமாம் ஊழ்வினைத் தொடர்ச்சியுள்ளதை மதுராபுரித் தெய்வவாக்கால் உணருமாறுள்ளது.

இருப்பினும் கோவலனும் மாதவியும் இணைவதற்குச் சிலப்பதிகாரத்தில் விளக்கமான கதைக்கூறு ஊழ்வினைப்படி அமைய இல்லையாயினும் கோவலன் தன் மகளுக்கு மணிமேகலை எனப் பெயரிடுவதாய்க் கூறும் ஒரு செய்தியானது ஒரோ வழி கோவலன் மாதவிக்கான ஊழ்த் தொடர்ப்பைக் காட்டுவதாக உள்ளது எனலாம்.

மணிமேகலைக் காப்பியத்தின்படி இலக்குமி என்பவளே மாதவியின் மகளாய்ப் பிறக்கிறாள். இதில் மணிமேகலையின் ஊழ்வினைத் தொடர்ச்சி கோவலனையும் மாதவியையும் சேர்த்து வைத்ததனாலும் அவ்விருவர்க்கும் உள்ள ஊழ்த்தொடர்பு இளங்கோவடிகளால் நுட்பமாக உணர்த்தப்படுகிறது.

தேவலோகத்து ஊர்வசியும் சயந்தனும் புகார் நகரில் மாதவியும் தலைக்கோலான மூங்கிலுமாகப் பிறக்கின்றனர். விலையுயர்ந்த தலைக்கோலை விற்பதற்காகக் கூனியிடம் கொடுக்காமல் மாலையை மட்டும் கொடுத்தனுப்புகிறாள் மாதவி. தலைக்கோலையடைந்ததோடு சயந்தனின் தொடர்பு துண்டிக்கப்பட்டாலும் கோவலனோடு தொடர்பு தொடங்கத் தேவலோகத்தில் நடந்த இசையோடு கூடிய நடனமே காரணமாகும்.

திருவோலக்கத்தில் ஊர்வசி நடனமாட, சயந்தன் அவளைக் கண்டு காதல் கொள்ள, அதனால் நடனம் பாழ்பட்ட நிலையில் தாளமும் இசையும் பிறழ்ந்ததால் ஊர்வசியும் சயந்தனும் சாபத்திற்கு ஆளாகிச் சோழநாட்டில் பிறந்தனர். தலைக்கோலாம் மூங்கிலின் தொடர்பான சயந்தனின் தொடர்ச்சி முற்றுப்பெற்ற நிலையில் இசைப்பிறழ்ச்சியே இன்றியமையாததாயிருந்தது என்பதால் அதே இசைப் பிறழ்ச்சியின் வழிப் பின்னர் கோவலனைக் கானல்வரிப்பாட்டால் பிரியப் போவதன் உண்மைக்கு அவ்விருவரும் (கோவலனும் மாதவியும்) இணையவேண்டியவர்களாக இருந்ததால் மாலை வாங்கிய கோவலன் மாதவியையடைந்தான். இந்தத் தொடர்ச்சிக்காகவே தலைக்கோலை விற்பதாக இளங்கோ அமைத்துக் காட்டாமல் "மாலை வாங்குநர் சாலும் நம் கொடிக்கு" என மாலையைக் கொடுத்தனுப்பினாள் மாதவி எனக் கூறினார். மாலை என்பது பூமாலையைக் கொடுத்தாலும் "தொடர்ச்சி" என்ற பொருளின்படி தேவலோக இசைப் பிறழ்ச்சியின் பிரிவு நிகழப் போவதன் ஊழ்வினைக் காப்பிய ஆசிரியர் "யாழிசை மேல் வைத்து தன் ஊழ்வினைவந்து உருத்ததா கலின்" என்றார்.

காப்பிய முழுமைக்குமான ஊழ்வின்னைத் தொடர்ச்சிகளைக் காப்பிய ஆசிரியரே நன்கு உணர்ந்தவர் என்பதால்தான் மாடல மறையோன் கோவலனைப் பார்த்தபோது இம்மைச் செய்தன

யானறிவேன், ஆனால் உம்மைச் செய்ததை யறியேன் என்பதாகக் கூறவைத்தார். எனவே ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பது உறுதியாகிறது.

பதிகத்தில் கூறிய அரசியல் பிழைத்தோர்க்கு அறமாம் ஊழ்வினைவந்து உருத்தியதை மதுரைக் காண்டத்தால் உணர்த்தியதைப் போலவே இளங்கோவடிகள் உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துதற்கும் ஊழே காரணம் என்பதையும் நுட்பமாக உணர்த்தினார். உரைசால் பத்தினி எனப் பொதுப்படக் கூறினாலும் சிலப்பதிகாரத்தின் அடிப்படையில் அவ்வரிக்குக் கண்ணகியே சான்றாகின்றார்.

அவளைக் கவுந்தியடிகள் ஏத்தினார், கொற்றவை ஏறியாடிய சாலினியும் புகழ்ந்தாள். அவள் தெய்வத்திருவுரு ஆனதற்குப் பின்னர் குன்றக் குறவர்கள், சேர நாட்டினர் ஏத்துகிறார்கள். பிறநாட்டார்களும் பாராட்டி வணங்குகிறார்கள். இவையெல்லாம் ஊழ்வினையால் நடந்தவை? என்றால் உண்மையில் இல்லை என்றே கூறலாம். ஊழ்வினைத் தொடர்ச்சிக்கான கதைப்பாங்கு இல்லையானாலும் காப்பிய ஆசிரியர் இளங்கோவடிகள் ஊழ்வினைத் தொடர்பால் கண்ணகியாம் உரைசால் பத்தினியை ஏத்தினார் என்பதுதான் இலைமறையான நுட்பமுடன் அறிந்து மகிழவேண்டிய ஒன்றாக உள்ளது.

இளங்கோவடிகள் துறவு பூண்ட வரலாற்றோடு காப்பியத்தை நிறைவு செய்யும் அடிகள், கண்ணகித் தெய்வத்தை வணங்கத் தமியராய்ச் சென்றபோது தேவந்திகைமேல் கண்ணகித் தெய்வ ஆவியுரு ஏறித் தம்மைப் பாராட்டிக் கூறுவதாகக் கூறுகிறார். முன்பு தந்தை சேரலாதனுடன் அவையில் வீற்றிருந்தபோது நிமித்திகன் ஒருவன் அரசாட்சி புரியும் மாண்பு இளங்கோவாகிய உமக்கே உண்டு எனக் கூறியபோது மூத்தோனிருக்க இளையோன் அரசேற்றல் முறையன்று என்பதால் இவ் வெவ்வுரை கேட்ட மூத்தோனாகிய செங்குட்டுவன் மனம் வருந்துமே என எண்ணி அது இல்லாதவாறாகத் தானே துறவு மேற்கொண்டதோடு மூத்தோன் ஆள வழிவகை செய்ததைக் கண்ணகித் தெய்வம் இளங்கோவடிகளைப் பாராட்டியது.

இக்கூற்றில் மூத்தவன் அரசாளல் முறை எனப்பட்டாலும் தம்பி துறக்க வேண்டியது ஏனெனில் துறவாமலிருந்தால் நிமித்தகனின்

வார்த்தையால் அரசாளும் நிலை மாறியிருக்கக் கூடும் என்ற காரணத்தின் பொருட்டு உடனடித் துறவு மேற்கொள்ளப்பட்டது. இதனால் அண்ணன் புவியரசு ஆவதற்கும் இளங்கோ கவியரசு ஆவதற்கும் வழிவகையானது.

இதனையே வேறு வகையாகச் சிந்தித்தாலும் ஓர் உண்மை புலப்படும். நிமித்திகனின் வார்த்தையைப் பொருட்படுத்தியிருந்தால் இளங்கோ கவியரசாகியிருக்கமுடியாது. புவியரசாகிக் கண்ணகி காப்பியத்தைப் பாடவும் நேர்ந்திருக்காது, ஒரோ வழி பாலை பாடிய பெருங்கடுங்கோ என்னும் சேர மன்னனைப் போல இளங்கோ புவியரசாயும் கவியரசாயும் ஒருசேரக் காணப்பட்டாலும் வினைக்கோட்பாட்டுடன் கூடிய காப்பியத்தைப் பாடியிருப்பாரா? என்பதும் ஐயப்பாடே! என்பதால் இளங்கோவைப் புவியரசாக்காமல் சமயத் துறவியாக்கிக் கவியரசாகவும் ஆக்கியது ஊழ்வினையே எனலாம்.

ஆனாலும் அவர் ஏன் துறவியாக வேண்டும் என்ற வினாவுக்கு விடை காண்பதும் அவரின் நிலைக்குப் புகழ்சேர்ப்பதாக அமைந்தது எனலாம். அண்ணனாம் சேரன் செங்குட்டுவனின் மனம் புண்படக் கூடாதே என்பதற்காகவும் தான் துறந்தால்தான் அண்ணன் அரசராக முடியும் என்பதற்காகவுமே அவர் துறவை மேற்கொள்கிறார். இங்ஙனமாகச் சிந்திப்பதில்தான் ஊழ்வினை ஒளிந்திருந்து வெளிப்பட்டது எனலாம். அதாவது தம்பியாகவே இருந்திருந்தால் அவர் கவியரசாகியிருக்கமுடியாது. ஆனால் அண்ணன் புவியரசாகியிருந்தாலும் கண்ணகிக்குக் கோயில் கட்டும் வாய்ப்பைப் பெறமுடியுமானாலும் இளங்கோவடிகளாம் கவித்துறவியால் சமய முகிழ்ப்போடு கூடிய காப்பியத்தைப் பாடமுடியாமல் போயிருக்கும் என்பதால்தான் நிமித்திகனின் வார்த்தை ஊழ்வினைத் தொடராகத் தம்பி இளங்கோவின் உள்ளத்தைத் தூண்டியதால் தம்பியாம் இளங்கோ குணவாயில் கோட்டுத்துத் துறவியாகிறார். பக்குவப்பட்ட மனநிலையில் கவிஞராகிறார்.

குணவாயில் கோட்டத்தில் துறவியாக மட்டும் இருந்திருந்தால் அவர் கண்ணகிக் காப்பியத்தைப் பாடமுடியாமல் போயிருக்கும். அவர் கவிஞராகவும் பக்குவப்பட்டதால்தான் சேரன் செங்குட்டுவனின்

அரசவைக் கவிஞராகவும் விளங்கிய தொடர்ச்சியில் மன்னன் மலைவளம் காணவந்தபோது உடன்வந்தார். அதனால் சாத்தனார் கூறிய கண்ணகியின் கதையையறிந்ததோடு காப்பியம் பாடவும் விரும்பி முப்பது காதைகளாகச் சிலப்பதிகாரத்தைப் பாடிமுடிக்கின்றார்.

இங்ஙனம் பாடிய இளங்கோவடிகளைப் பதிகம் "உரைசால் அடிகள் அருள" என்கிறது. முன்பு உரைசால் பத்தினி எனக் கூறியதற்கேற்பவே உரைசால் அடிகள் என்றது சிந்தனைக்குரியது.

ஊழால் பிறந்து வாழ்ந்து புகழ்கொண்ட கண்ணகியைப்போலவே இளங்கோவும் துறவானதோடன்றிக் கவிஞரானதும் ஊழ்வினையால் என்பதால் கண்ணகி பற்றிப் பாடினார் என்பதைப் பொருத்தி உணருமாறு உரைசால் பத்தினி, உரைசால் அடிகள் என்பன உள்ளதாகத் தெரிகின்றன.

கண்ணகியைப் பொறுத்தமட்டில் பலரின் புகழுரை சான்ற என்பதாகக் கூறினாலும் அடிகளைப் பொறுத்தமட்டில் நிமித்திகனது உரையே அவரைத் துறவியாகவும் கவிஞராகவும் ஆக்கிக் காப்பியம் பாடவைத்ததால் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் தந்த பெரும் புகழுரையைப் பெற்றார். நிமித்திகன் யாதொன்றும் கூறாதிருந்திருப்பின் இளங்கோ இளங்கோவடிகளாயிருக்க முடியாது. நிமித்திகன் வார்த்தை இளங்கோவுக்கு எதிர்மறையாகத் தெரிந்தாலும் அதுவே அவரைத் துறவியாகத் துரத்தத் தூண்டியது. நிமித்திகன் கூறிய "அரைசு வீற்றிருக்கும் திருப்பொறி உண்டு" என்றதை ஊழ்வினை வாசகம் என்பதாகவே உரைக்குறிப்பில் காணப்படுகிறது. (பெருமழைப்புலவர் உரைக்குறிப்பு) இதனை எதிர்த்தே இளங்கோ துறவறம் கொண்டதால் ஈண்டு ஊழ்வினையானது கூறப்பட்ட சொற்பொருள் நிலையில் அமையாமல் கூறப்பட்டதாகிய தூண்டுதலாலே உருக்கொண்டது. வெளிப்படையாக அல்லாமல் மறைமுகமாகவே வெளிப்பட்டது.

நிமித்திகன் யாதொன்றும் கூறாதிருந்திருந்தால் இளங்கோ தம்பியாகவே இருந்திருப்பார். துறவியாகிப் பின்னர் கவிஞராயிருக்கமாட்டார். எனவே நிமித்திகனது வார்த்தையின் சீற்றம்

எதிர்மறையாக ஊழ்வினையின் செயலை இலைமறையாகச் செய்ததால் அதுவே அவரைத் துறவியாக்கத் தூண்டியது என்பது உண்மையாம் என்க!

இந்நிலையில் ஊழ்வினைத் தொடர்புடைய கண்ணகி தான் தெய்வமானதும் தன்னைப் புகழ்ந்துரைக்கத் தன்னை ஒத்த ஊழ்த் தொடர்புடைய ஒருவரைத் தேர்ந்து பாடச்செய்ய இளங்கோவை ஆயத்தப்படுத்தினார் எனச் சிந்திப்பதும் சமயக் கோட்பாட்டின்படியும் உண்மை என உணரலாம்.

உலகியலில் படர்க்கையுள்ளோரையும் முன்னிலையில் உள்ளோரையும், வாழ்த்துவது உண்டு. தன்னைப் புகழ்தல் என்பது இல்லையாயினும் தெரியாதாரிடத்துத் தன்னைப் புகழ்தல் தகும் என்பதை இலக்கணம் ஏற்கும்.

ஆயினும் சமயக்கோட்பாட்டில் இறைவனை அடியார்கள் பாடுவது முறையாயினும் அதனை ஒரோவழியாக இறைவனைப் பாடுமாறு என்னைப் படைத்தான் எனக்கூறி இறைவனைப் பாடுதல் உண்டு. தன்னைத் தானே இறைவன் பாடிக்கொள்ள முடியாதாகையால் கடவுள் என்னைப் படைத்ததன் மூலம் தன்னையே பாடிக்கொண்டதாகக் கூறும் ஒருவகையான கோட்பாடு சிலரின் பாடல் அமைப்பால் தெரிகிறது.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே

என்பது திருமூலர் வாக்கு.

மாணிக்கவாசகருக்காக இறைவன் மண் சுமக்கிறான். பிரம்படி படுகிறான். இவையெல்லாம் ஏன் எனில் வாதவூரர் தன்னைப் பாடமாட்டாரா என ஏங்கிய ஏக்கத்தால் செய்தவை என்று கற்பனை செய்கிறார் சிவப்பிரகாசர்,

விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும்
நீற்றெழில் மேனியில் மாற்றடி பட்டும்
நின்னைத் தொண்டன் எனக்கொண் டனன்
பாடும் பணிநீ கூடும் பொருட்டு (நால்வர்.நா.மணி)

இங்ஙனம் கற்பித்துக்கொண்டு பாடும் முறை சமய உலகில் உருவாவதற்கு இளங்கோவடிகளே கண்ணகிமூலம் தோற்றுவாய் செய்துள்ளார் எனத் தெரிகிறது.

கண்ணகி மானுடத்தோர்டிருந்தபோது புகழ்ந்தோர் பலரிருக்க அவள் தெய்வமானதும் பாடியோர் பலராவார். அவர்களுள், இளங்கோ தனித்துவம் உடையவராகக் காணப்படுகிறார். தேவந்திகை மீது ஏறிய கண்ணகித் தெய்வமே இளங்கோவின் வரலாற்றைக் கூறுகிறது. தனது வரலாற்றை எடுத்துக்கூறிய நன்றிக்காகக் கண்ணகி வரலாற்றை இளங்கோ எடுத்துக் கூறியதாகக் கருத்தைப் பதிவு செய்கிறார்.

என்திறம் உரைத்த இமையோ ரிளங்கொடி
தன்திறம் உரைத்த தகைசால் நன்மொழி (வரந் 183-184)

என் திறம் உணர்த்தியது என்பதால் கண்ணகி, தான் ஊழின்படி வந்ததுபோல வந்தவர் இளங்கோவடிகள் என்ற குறிப்பின் தொனிப்பு பளிச்சிடுகிறது. இதனால் அவளைப்பற்றி அவர் பாடத் தகுதி பெற்றதால் அவர் உரைசால் பத்தினியை ஏத்திப் பாடினார் என்பது பொருத்தமாயிற்று.

இங்ஙனம் சமயத் தொடர்பாகப் பொருத்திப் பார்க்க ஓர் இன்றியமையாத காரணம் உண்டு. அகம், புறம் என்ற கோட்பாட்டைக் கொண்ட சங்க கால இலக்கியங்கட்குப் பின்னர் எழுந்த காப்பிய காலத்தில் அகம் புறத்தோடு சமயச் கோட்பாடு மிகுதியும் ஆளுமை பெற்றது. அதற்குச் சிலம்பே தக்க சான்றாயினும் சமயக் கூறுபாட்டில் இறைவன் தன்னைப் பாட அடியார்களைப் படைத்தான் என்று தான் தற்புகழ்தல் தகும் புலவோர்க்கே என்றபடியான கருத்தாக்கத்தின் தொடக்கத்தை இளங்கோவடிகளே தோற்றுவித்தார் எனலாம்.

ஆக உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தல் பொதுமையாயினும் சிலம்பைப் பொறுத்தமட்டில் ஊழ்வினையால் பிறந்த கண்ணகியே பத்தினியாகப் பலரால் புகழப்பட்டாள். சிலம்பின் நிகழ்வுகளுக்கெல்லாம் ஊழே அச்சாணியானாலும் சிறப்பாக அரைசியல் பிழைத்ததற்கும் உரைசால் பத்தினியை ஏத்துதற்கும் ஊழே சுக்கானாக இருந்து செயல்பட்டதால் பால்வரை தெய்வம் எனப்பட்டதே சிலம்பில் ஊழ் என்ற பெயரில் வெளிப்படையாக வினை எனப்பட்டாலும் ஊழ், வினை எனும் சொற்களைக் கூட்டியே இளங்கோ தெய்வம் தெளிமின் என்றார் என்பதால் சிலம்பின் கொழிப்பு ஊழேயாம் என்க!

திருவஞ்சைக்களம்
பெயர்க் காரணம் - ஓர் ஆய்வு

(தருமையாதீனப் புலவர்.வித்துவான். தா. குருசாமி தேசிகர்)

திருவஞ்சைகளம் கேரளாவில் உள்ளது. மலைநாட்டுத் தலம். திருச்சூரில் இருந்து 32 கி.மீ. தொலைவில் உள்ளது. மக்கள் வழக்கில் ஸ்ரீவாஞ்சிக்குளம் எனப்படுகிறது. சேரமான்பெருமாள் ஆண்ட கொடுங்கோலூர் 12.கி.மீ. உள்ளது. பரசுராமர் தாயைக் கொன்ற பாவம் நீங்க வழிபட்ட தலம். இங்குள்ள நடராஜர் சேரமான்பெருமாள் பூசித்தது. பஞ்சலோகச் சிலை. இதன் கீழ் திருவஞ்சைக்களத்து சபாபதி என எழுதப்பட்டுள்ளது.

சரித அடையாளம்

கோயிலின் பக்கச் சுவர்களில் யானை உருவங்கள் வெளியில் இருந்து கோவிலுக்குள் செல்வது போலவும், எதிர்ச் சுவரில் அவ்வானைகள் கோயிலில் இருந்து வெளிவருவது போலவும் சிற்பங்கள் உள்ளன. சுந்தரர் சேரமான்பெருமாள் உருவங்களும் உள்ளன. வெள்ளையானை மீதேறிக் கயிலை சென்ற சுந்தரரின் வரலாற்றுச் சுவடு பற்றிய குறிப்புகள், பல மலையாளிகளுக்குத் தெரியாவிட்டாலும், படித்த சில மலையாள அன்பர்கள் மட்டும் இதனை அறிவர் என்பர். கோவை சேக்கிழார் திருக்கூட்டத்தின் தலைவராக இருந்த சி.கே.சுப்பிரமணிய முதலியார பெரும் முயற்சியால் அக்கால கேரள அரசின், திவானாயிருந்த சர்.சி.பி.இராமசாமி அய்யர், சர்.ஆர்.கே.சண்முகம் செட்டியார் உத்திரவுப்படி, இத்தலத்தில் சைவப்பேரன்பர்களால் தமிழகச் சைவாதீனங்களின் ஆசியோடு, சுந்தரர் விழா இன்றும் ஆடிசுவாதி நாளில் நிகழ்கிறது.

பெயர்க்காரணம்

திருவஞ்சைக்களம் கோயில் இருக்கும் பகுதியே மகோதை. இதன் பெயர்க்காரணம் கூறும் சேக்கிழார், "வளநகர்தான் கோதையரசர் மகோதையெனக் குலவு பெயரும் உடைத்து உலகில்" என்பார். இது சங்க காலத்து மாக்கோதை வேந்தன் பெயரைத் தொடக்கத்தே தாங்கியிருந்து, பின்னர் மகோதையார் பட்டினம் என்ற பெயரால் நின்றது என்றும், இன்று

அப்பெயர் மகாதேவர் பட்டினம், மகோதையார்புரம் எனவும் வழங்கி வருகிறது என்பர். சோழன் குராப்பள்ளித்துஞ்சிய கிள்ளிவளவன், கொங்கணரை வென்று கொங்குநா கடந்து, குடபுலமான மேலைக் கடற்கரையை அடைந்து அங்குள்ள கருவூரை எறிந்து வெற்றி கொண்டான்.

வெற்றியின் விளைவு

வஞ்சியாகிய சேரர் தலைநகர் "முற்றத்தில்" பெரும்போர் செய்து, கிள்ளி வளவன் வெற்றிபெற்ற நினைவாக "வஞ்சிக்களம்" என்று மாற்றினான். இது புறநானூறு 37ஆம் பாடலால் தெரியவரும். அக்காலத்தில் காவிரிக் கரையில் இப்போது உள்ள கருவூர் அதனால் வஞ்சிநகரம் என்று பெயர்மாற்றம் பெற்றது. அதன் அருகே ஓடும் ஆறு ஆன்பொருனை இன்று அமராவதி ஆயிற்று. சேரர் தலைநகர் வஞ்சி, வஞ்சிக்களம் என மாறியதனால் காவிரிக்கரை கருவூர், வஞ்சியான கருவூர் எனப்பட்டது. கல்வெட்டில் கருவூரான வஞ்சிமாநகர் எனக்காணப்படும். சங்க காலத்தின் வஞ்சிக்களம் பிற்காலத்தில் அஞ்சைக்களம் என மருவிற்று. அவ்வூர் கல்வெட்டுக்கள் திருவஞ்சைக்களம் எனக் கூறுகின்றன என்று ஔவை.சு.துரைசாமி பிள்ளை (சைவ இலக்கிய வரலாறு) ஆய்ந்து கூறிய செய்தி திருமுறை உலகிற்கு அரிய நன்கொடையாகும். அவரது கொடைக்கு வணக்கம் செலுத்துவோமாக.

சேரமான் பற்றி

சேரமான் பெருமாள் நம்பியாரூரரின் தொடர்புகொண்ட திருக்கண்டியூரில் ஆறு விலகிய அற்புதச் செயல் காரணமாக, சேரன் தன்நாட்டிலும் திருக்கண்டியூர் உண்டாக்கி, வழிபாட்டிற்கு கோயில் கட்டியதாக ஆய்வாளர் கூறுவர். சேரமான் பெருமாளின் சிவப்பற்றும், சுந்தரர் தோழமையும் அவர் அருளிய ஆதி உலாவும் வரலாற்றுக் கூறுகளாகும். சேரர்கள் பலரும் சிவபக்தர்களாக இருந்தமை, சங்க நூல்களால் தெரிய வரும். கன்னடியரும், தெலுங்கரும், சேரமான் பெருமாள் போன்ற ஒரு சிவபக்தி மிக்க பைந்தமிழ் அறிந்த மன்னரைத் தரவில்லை. திருமுறை ஆசிரியர்களில் ஒருவரான சேரமான் பெருமாள் நாயனார் போன்று, திராவிட இனத்து கன்னட தெலுங்கு மன்னர்களில் காணப்படாததற்கு காரணம், காலத்தால் முந்திப் பிரிந்து, தெலுங்கர், கன்னடியர், தமிழோடும் தமிழ் இனத்தோடும் ஒட்டுறவு இல்லாதவர் ஆகிவிட்டனர். வடபுலத் தாக்கம் மிகுதி என்பார் வரலாற்றார்.

சேக்கிழார் செய்தி

சேக்கிழார் அருளிய வெள்ளானைச் சருக்கத்தில் சேரமான் பெருமாள் சுந்தரரின் நட்பு போற்றப்படுகிறது. சுந்தரரை தன்னாட்டில் வரவேற்று, போற்றிய கட்டமைப்பு, அவர்கள் நட்பை விளக்கும் பாங்கு வியக்கத்தக்கது. சேரமானும் ஆரூரரும் இரு உடல்களே தவிர, உயிரால் ஒன்றாய் கலந்திருந்தனர் என்றும், ஒருவர் ஒருவரில் கலந்து, குறைபாடின்றி இருதிறத்து அன்பர்களும், இருவரின் உயர் காதல் பேரன்பைக் கண்டுவியந்தனர் என்றும், விவரிப்பார்.

பதிகத் தமிழ்

மலைநாடாகிய சேரநாட்டில் உள்ள சிவத்தளிகள் முழுவதையும் சுந்தரர் தரிசித்தார். பின்பு திருவஞ்சைக்களத்தில் சுந்தரர் எழுந்தருளியிருந்தார். அத்தலத்துப் பெருமானை வணங்கி மகிழ்ந்து இருந்தபோது, அரிய சிந்தனை ஆரூரருக்குத் தோன்றியது. "அவனியில் விழுந்தெழுந்து, அலைப்புறும் மனைவாழ்க்கை அகலவேண்டும்" என்று எண்ணி "தலைக்குத் தலைமாலை" என்று தொடங்கும் தமிழ்மாலைப் பதிகம் பாடினார். அத்திருப்பதிகத்தின் உட்குறிப்பு "இவ்வுலகில் பாசம் அடுத்த வாழ்க்கையை அறுத்திட வேண்டும்" என்று, பரமனிடம் பாடுகிடந்து சுந்தரர் வேண்டிய செய்தியாகும். அச்செய்தி அடங்கிய ஆரூரரின் அருந்தமிழ் வரிகள் அஞ்சைக்களம் தந்த நன்கொடையாகும். செம்மொழிக்கும் அரிய ஆய்வுச் செய்தியாகும்.

ஆய்வுச் செய்திகள் :

1. "சிந்தித்து எழுவார்க்கு நெல்லிக்கனியே"
2. "சிறியார் பெரியார் மனத்தேறலுற்றாய்"
3. "முந்தித் தொழுவார் இறவார் பிறவார்"
4. "இழைக்கும் எழுத்துக்கு உயிரே ஒத்தியால்"
5. "குழைக்கும் பயிர்க்கோர் புயலே ஒத்தியால்"
6. "அடியார் தமக்கோர் குடியே ஒத்தியால்"
7. "பாடும் புலவர்க்கு அருளும் பொருள்என்"
8. "பரவித்தொழுவார் பெறும் பண்டமென்னே"
9. "ஆர்க்கும் அழிவும் அமைவும் நீயென்பன் நான்"
10. "சொல்வார் சொற்பொருளானவை நீயென்பன் நான்"
11. "நாக்கும் செவியும் கண்ணும் நீயென்பன் நான்"

என்பன போன்ற திருவஞ்சைக்களப் பதிகச் செய்திகள் நம்மை வியப்பில்

ஆழ்த்துவதோடு, முறையான வாழ்க்கைக்கும் இறைவன் அருள் செய்வான் என்பதும் இதன் மூலம் விளங்கும்.

வரலாற்றுச் சிந்தனை

கன்னடரும் தெலுங்கரும் புதிய வரவாகிய சமண, பௌத்த சமயங்களில் ஆர்வமிக்கவராகி, தமிழைவிட்டு முன்னே தொடர்பு கொண்டிருந்தாலும், கன்னட நாட்டில் திருக்கோகர்ணம் தலமும், தெலுங்கு நாட்டில் திருப்பருப்பதம் என்னும் தலமும், திருமுறைத் தலங்களாக சைவத்தமிழ் எடுத்துக் காட்டும். திருவஞ்சைக்களம் ஒரு சேரமான் பெருமாளைத் தந்து, சைவப்பண்பாடு போற்றியது போல, திருக்கோகர்ணமும், திருப்பருப்பதமும் (ஸ்ரீசைலம்) சைவத் தமிழ்ப்பண்பாட்டு மன்னர்களைத் தரவில்லை. திருமுறை வரலாற்றில் தெலுங்கு மன்னரும், கன்னட மன்னரும் இடம் பெறவில்லை.

காம்பீலி

பெரியபுராணம், நேசநாயனார் பிறந்த ஊரை, காம்பீலி என உரைக்கும். அந்நகர் ஆந்திராவில் உள்ளது என்பர் சிலர். பலர் மயிலாடுதுறை கூறைநாட்டு ஊரைச் சேர்ந்தவர் என்பர். காலவெள்ளத்தில் சேரநாட்டு மன்னர்கள் இன்று, மலையாளிகள் என்று அழைக்கப்பட்டாலும், அவர்கட்கும் தமிழ் மக்கட்கும் உரிய சமயத் தொடர்பும், இயைபும் சிந்திக்கத்தக்கதாகும்.

இடைக்காலத்தில் தெலுங்கு மன்னர்கள் சிலர், சோழரின் சம்பந்தம் பெற்றிருந்தாலும், குலோத்துங்கன் போன்ற சோழமன்னர் சைவப்பண்பாடு வளர்த்திருந்தாலும், காலத்தால் முந்தியவர்கள். கன்னடியர் தெலுங்கர் மொழியால் மிக முற்காலத்தே பிரிந்ததால், சைவப்பண்பாடு புறந்தள்ளப்பட்டது. வடக்கே உள்ள எல்லோரா அஜந்தாக் குகைகள் புத்த, சமண பெரும்பான்மை வளர்ச்சியைக் காட்டுவன என்பதை அறியலாம்.

திருவஞ்சைக்களம், "வஞ்சிக்களம்" மூலம் சோழன் கிள்ளிவளவனால் வந்த திருப்பெயர் என்பதையும், அதுவே சைவசமய எழுச்சிக்காலத்தில் திரு. அஞ்சைக்களம் என்று பெயர் பெற்று விளங்கியது என்பதையம் அறிந்து மகிழ்வோமாக.

அடிகள் செய்த நகைச்சுவை

தேவகோட்டை திருவள்ளுவர் அருள்நெறிப்பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. எம். இலட்சுமணன் அவர்களது செல்வன் திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்குத் தவத்திரு குருமகாசந்நிதானம் பொன்னம்பல அடிகள் வாழ்த்துரை வழங்க வருகை தந்தார்கள். வாழ்த்தரங்க நிகழ்வுகள் தொடங்கின. அடிகள் உரை நிகழ்த்த ஆயத்தம் ஆனார்கள். நான் அடிகளுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தேன். உரையின் போது முன்னுரையாக, யார் யார் பேசினார்கள் என்று சுட்டிச்சொல்ல விழைந்த அடிகள், பேசினோர் விவரங்களை என்னிடம் கேட்டார்கள்.

"முதலில் பேசியவர் சீனிவாசன்; அடுத்துப் பேசியவர் ராதாகிருஷ்ணன், கடவுள் வாழ்த்துப் பாடியவர் கவிஞர் அனுஷம் பாலு...." என்று நான் சொல்லிக்கொண்டே வந்து, சற்று நிறுத்தினேன்; அடிகளும் நான் சொல்லச் சொல்ல, கையில் இருந்த சிறுகுறிப்புத் தாளில் குறித்துக்கொண்டே வந்தார்கள். சிறிது நகைச்சுவை ஊட்டுவதாக நான் நினைத்துக் கொண்டு, "நானும் பேசினேன், என் பெயர் மு. பழனி இராகுலதாசன்" என்றேன்.

எனது நகைச்சுவையாடலைச் சட்டென்று புரிந்துகொண்ட அடிகள், "நல்லவேளை, சொன்னீர்கள், ரொம்பவும் நெருக்கமானவர்களின் பெயர்தான் அடிக்கடி மறந்து போகிறது" என்றார்கள். சுவைக்கு மேல் சுவையாக, அடிகள் செய்த நகைச்சுவை அரங்கத்தை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது!

– மு. பழனிஇராகுலதாசன்

நான், எனது என்ற எண்ணம் இல்லாமல் இருந்தால் துன்பம் வராது. எதையும் துறந்துவிட்டோம் என்று எண்ணிப் பாராமல் இருப்பதுதான் துறவு என்கிறது குறள்.

அன்பு, ஞானம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகியவை மனித வாழ்க்கைக்கு முக்கியமானது. பசு தனது குருதியை பாலாக்கி தருவதால் மதிக்கப்படுகிறது. வாழும் காலத்தில் செய்யும் தியாகம் போற்றப்படும். தற்போதைய கல்விமுறை துறைசார்ந்த வல்லுநர்களை மட்டுமே உருவாக்கி வருகிறது. மனிதர்களை உருவாக்க மறந்துவிட்டது. அறம் பேசும் சமுதாயத்தை இலக்கிய மன்றங்கள் உருவாக்க வேண்டும்.

– தவத்திரு பொன்னம்பல அடிகளார்

(பெரியகுளம் தமிழ் இலக்கியமன்றத்தின் 60ஆவது ஆண்டு நிறைவு விழாவில்...)

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திரு. க. சிவாஜி, அவர்கள், (ஓய்வு பெற்ற கூட்டுறவுத்துறை கூடுதல் பதிவாளர்)
எழுதியுள்ள
"கூட்டுறவு இயக்க முன்னோடிகள் வாழ்வும் தொண்டும்"
என்ற நூலிலிருந்து)

தமிழகத்தின் புகழ்பெற்ற மடாதிபதிகளில் ஒருவர். ஆன்மீகத் தலைவர். செந்தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்த புலமை பெற்றவர். சிறந்த மேடைப்பேச்சாளர். இவற்றுக்கெல்லாம் மேலாக எதையும் சமூகக் கண்கொண்டு ஆய்ந்து சமூக நலம் நாடும் உயர்வான சிந்தனையாளர் போன்ற பல சிறப்புக்களை பெற்றவரான தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஒரு சிறந்த கூட்டுறவாளராகவும் விளங்கினார்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் நாகபட்டினம் மாவட்டம் மயிலாடுதுறை அருகேயுள்ள நடுத்திட்டு என்னும் சின்னஞ்சிறு கிராமத்தில் 11.07.1925இல் பிறந்தார். இவரது தந்தை சீனிவாசம்பிள்ளை. தாயார் சொர்ணத்தம்மாள். இவர்களுக்கு சிவானந்தம் அம்மையார் கோபால கிருஷ்ணபிள்ளை, பாண்டுரங்கம் பிள்ளை மற்றும் அரங்கநாதன் என்றவாறு நான்கு குழந்தைகள். குடும்பத்தில் கடைசியாகப் பிறந்த அரங்கநாதனே பின்னாளில் தமிழகம் கண்ட தவத்திரு குன்றக்குடி அடிளார் ஆவார்.

அரங்கநாதன் தனது ஆரம்பக்கல்வியை உள்ளூரிலேயே படித்தார். ஒரு சிறுவனுக்குரிய குறும்புத்தனங்களிலும் விளையாட்டுக்களிலும் இவருக்கு நாட்டமிருக்கவில்லை. விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பதற்கு ஏற்ப புத்தகம் படிப்பதிலும் சமூக சேவையிலும் ஆர்வம் இருந்தது. இவரது அண்ணன் கோபாலகிருஷ்ணபிள்ளை மேற்படிப்புக்காக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்த போது, அவரது படிப்பிற்குத் துணைபுரியும் பொருட்டு குடும்பமே சிதம்பரத்திற்கு குடிபெயர்ந்தது. அதுசமயம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையில் சுவாமி விபுலானந்த அடிகள், சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தரபாரதியார், பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார் ஆகிய தமிழ்ப் பெரியார்கள் பணியாற்றிக் கொண்டிருந்தனர். இப்பெரியவர்களுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு சிறுவன் அரங்கநாதனுக்குக் கிட்டியது. அப்பெரியவர்களுக்கு அரங்கநாதன் தினமும் பால் கொண்டுபோய்

கொடுப்பது வழக்கமாயிற்று. படிப்பார்வமும் தொண்டுள்ளமும் நிறைந்த அச்சிறுவனை அவர்களுக்கு பிடித்துப்போயிற்று. குறிப்பாக ரா.பி. சேதுப்பிள்ளை அவரை நாள்தோறும் ஒரு திருக்குறள் மனப்பாடம் செய்யச் செய்து, அதற்கான வெகுமதியாக தினம் காலணாப் பணம் கொடுக்கும் வழக்கத்தைச் செய்து வந்தார். அடிகளாருடைய ஒரு பரிமாணமான தமிழினப்பற்று பெரும்பாலும் சேதுப்பிள்ளையிடமிருந்து பெறப்பட்டதே. (பொன்னீலன் 2003.பக்கம்.8) மக்கள் சேவைக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ராமகிருஷ்ண மடத் துறவியான விபுலானந்த அடிகள் மாலை நேரங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் சேவைக்காகச் சேரிகளுக்குப் போய், துப்புரவுப் பணிகளில் ஈடுபடுவதுடன் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரங்களும் செய்து வந்தார். சிறுவன் அரங்கநாதனும் கையில் அரிக்கேன் விளக்குடன் அவருக்கு உதவியாகப் போவார். விபுலானந்த அடிகளாரது தன்னலமற்ற சேவையை நேரில் காணும் போது சிறுவன் அரங்கநாதன் ஆழ்மனதிலும் இத்தகைய சமூக சேவை எண்ணங்கள் வேரூன்றி வளரத் தொடங்கின. விபுலானந்த அடிகள் தொடர்பால் தான் தீண்டாமை விலக்கு உணர்வும் மனித நேயமும் நமது வாழ்க்கையில் குறிக்கோள்களாக அமைந்தன. (தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், 2002, சென்னை பக்கம் 72). என அடிகளார் தமது உள்ளக்கிடக்கையைப் பிற்காலத்தில் வெளிப்படுத்தினார். இப்படியாக விவுலானந்த அடிகளிடமிருந்து துறவு, தியாகம், சேவை போன்ற உயர்ந்த மனிதப் பண்புகளை இவர் கற்றுக்கொண்டார்.

வித்வான் படிப்பு முடிந்ததும் கோபாலகிருஷ்ணபிள்ளை வேலையின் நிமித்தமாக காரைக்குடி அருகில் உள்ள கடியாபட்டிக்குப் போனபோது அரங்கநாதனும் உடன் சென்றார். அங்கே அவர் ஸ்ரீ பூமீஸ்வர சுவாமி இலவச உயர்நிலைப் பள்ளியில் கல்வி பயின்றார். தேச விடுதலைப் போர் தீவிரமாகிக் கொண்டிருந்த நேரம். மாணவர்களிடத்தே விடுதலைப் போராட்ட உணர்வுகள் பரவி காங்கிரஸ் இயக்கம் வேரூன்றி வளரத் தொடங்கிய காலம். இதே காலகட்டத்தில்தான் இப்பகுதியில் பெரியார் கருத்துக்களும் வேகமாகப் பரவிக் கொண்டிருந்தன. இந்த இரண்டு வித இயக்கங்கள் பற்றியும் ஏராளமாகக் கற்றார் அரங்கநாதன். தமிழார்வம் வளர்ந்தது. பாரதியின் கவிதைகளை ஊன்றிக் கற்றார்.

1942 இல் வெள்ளையனே வெளியேறு போராட்டம் நடந்தபோது மாணவர்கள் பள்ளிக்கட்டிடத்தின் உச்சியில் தேசக்கொடியைப்

பறக்கவிட்டார்கள். இதில் அரங்கநாதனும் ஆர்வமுடன் கலந்து கொண்டார். அதே ஆண்டில் நடைபெற்ற எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் அரங்கநாதன் தேர்ச்சி பெறவில்லை. இதன் பின் ஏதேனும் வேலை ஒன்றில் சேர்ந்துவிட பல வழிகளிலும் முயன்றார்.

ஆன்மீக நாட்டமும் சமூக சேவையில் ஆர்வமும் கொண்டிருந்த அரங்கநாதனுக்கு கூலித் தொழில்கள் எதிலும் விருப்பமிருக்கவில்லை. 1944-இல் தருமபுர ஆதீன திருமடத்தில் எழுத்தாளராகப் பணியாற்றச் சென்றார். அங்கே அவருக்கு மனநிறைவு கிடைத்தது. அரங்கநாதனின் தமிழ் ஆர்வமும் இறை ஈடுபாடும், ஆதீனத்தின் 25 ஆவது குருமகா சன்னிதானம் கயிலைக் குருமணி அவர்களுக்கு பிடித்திருந்தது. ஒரு சமயம் அரங்கநாதனுடன் பேசிக்கொண்டிருந்த மகாசன்னிதானம் பேச்சின் ஊடே, "பழுக்கலாமா?" எனக் கேட்டார். அரங்கநாதனுக்கு பொருள் புரியாமல் பதில் சொல்லவில்லை. துறவு பூணச் சம்மதமா? என்பது தான் அதற்குப் பொருள் என விளங்கியபோது அதுதான் சரியான வழி எனத் தீர்மானித்தார். குடும்பத்தாரின் எதிர்ப்பையும் மீறி அரங்கநாதன் துறவறம் பூண்டார். (அருள் நம்பி, 1999, பக்கம் 24-25). 1945-ஆம் ஆண்டு அரங்கநாதனுக்கு முறைப்படி தீட்சை அளித்து, துவர் ஆடை கொடுத்து கந்தசாமித் தம்பிரான் என்று தீட்சா நாமமும் வழங்கினார். இப்படியாக அடிகளாரின்துறவு வாழ்க்கை தொடங்கிற்று.

1945-ஆம் ஆண்டு கயிலைக் குருமணி அவர்கள் அடிகளாரைத் தருமபுர ஆதீனத்துக்கு உட்பட்ட மயிலாடுதுறை குமரக்கட்டளைத் தம்பிரானாக நியமித்தார். பின்னர் சீர்காழித் திருக்கோயில் கட்டளைத் தம்பிரானாகவும் அமர்த்தினார். இவரது ஆன்மீகப் பணிகளில் குருமகா சன்னிதானத்திற்கு மிகுந்த நம்பிக்கை உண்டாயிற்று.

1949இல். குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் குருபூஜை விழாவுக்கு குருமகாசன்னிதானம், ஆதீனத்தின் பிரதிநிதியாக அடிகளாரை அனுப்பி வைத்தார். இந்த சம்பவம் அடிகளாரின் வாழ்வின் புதிய ஒரு திருப்புமுனையாக அமைந்தது. குன்றக்குடிக்கு வந்த அடிகளாரை குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் மகா சன்னிதானம் ஒரு சொற்பொழிவு ஆற்ற ஏற்பாடு செய்தார். இச்சொற்பொழிவு மகாசன்னிதானம் உள்ளிட்ட அத்தனைப் பேரையும் கவர்ந்துவிட்டது. இப்படியாக குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்துடன் ஏற்பட்ட தொடர்பு

1949இல் அடிகளாரை திருவண்ணாமலை ஆதீனத்தின் இளவரசராகப் பட்டம் சூட்டுவதில் கொண்டு நிறுத்தியது. பட்டம் ஏற்றபின் அவர் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் ஆனார். பின்னர் 1952 ஜூன் 16ஆம் நாள் குன்றக்குடி ஆதீனத்தின் முழுப்பொறுப்பையும் ஏற்று 45வது குருமகா சன்னிதானமானார்.

அடிகளார்ஆதீனப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு செயல்பட்ட ஆரம்பகாலக் கட்டத்திலேயே மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளிலும் கவனம் செலுத்தத் தொடங்கினார். இவரது சமூகம் சார்ந்த அவரது கருத்துக்களும் செயல்பாடுகளும் பலருக்கு வியப்பை ஏற்படுத்தியது. இது போன்ற விமர்சனங்களைப் புறம்தள்ளி தனது கொள்கை வழி செயல்பட ஆரம்பித்தார். சமுதாயத்தின் நலனுக்குப் பொருளியல் சமத்துவம் மிக மிகத் தேவையானது சமத்துவம் இல்லையானாலும், தனிமனிதனுடைய அத்தியாவசியமான சுய தேவ்வையானது நிறைவு பெறுதல் வேண்டும். அங்ஙனம் சுயதேவை நிற்றவு பெறாவிடில், வெறுப்பும், வெறியும் சமுதாயத்தில் வளரத் தொடங்கி, கலகங்களை விளைவித்து, கொலையைப் பெருக்க ஏதுவாகும் என்றார். (குன்றக்குடி அடிகளார், 1954-பக்கம்-4) வறுமை நோய்க்கு மருந்து தேவை. அன்றாட வாழ்வின் துன்பச்சாயல் இல்லாதிருந்தால்தான் நல்லறப் பண்புகளும் நல்லொழுக்கமும் பக்தியும் வளரமுடியும். சமூகத்தில் அடிப்படை மாற்றத்தைக் கொண்டு வர விரும்பும் வினோபாஜியின் பூமிதான இயக்கத்தை அடிளார் ஆதரித்தார்.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற கொள்கையில் உறுதி கொண்டிருந்த அடிகளார் மக்கள் தொண்டு செய்யும் பொருட்டு அருள் நெறித் திருக்கூட்டத்தின் கிளையாக "அருள்நெறித் திருப்பணி மன்றம்" என்ற அமைப்பை நிறுவி அதன் மூலம் பண்பாட்டு பயிற்சியும் விஞ்ஞானக் கல்வியும் வளர பல கல்விக் கூடங்களை நிறுவினார். இக்கல்விக் கூடங்களுக்குப் பெயர் சூட்டுவதிலும் முற்போக்கான எண்ணங் கொண்டவராக அடிகளார் விளங்கினார். சமயம் சார்ந்த அமைப்பின் மூலம் நிறுவப்பட்ட அக்கல்வி கூடங்கள் சிலவற்றிற்குத் திருவள்ளுவர், அறிஞர் அண்ணா, அம்பேத்கர், திரு.வி.க. ஆகிய பெரியோர்களின் பெயரைச் சூட்டி மகிழ்ந்தார். ஏறத்தாழ இங்ஙனம் 17 கல்விக் கூடங்களை நிறுவி ஒரு கல்விப் புரட்சியைத் தோற்றுவித்தார் (பொன்னீலன், 2003,பக்கம்-32)

இந்தக் காலகட்டத்தில் தமிழக மக்களை நாத்திக வழியில் ஒன்றுபடுத்த விரும்பிய பெரியாரும், ஆத்திக வழியில் ஒன்றுபடுத்த விரும்பிய அடிகளாரும் ஒருவரை ஒருவர் கொள்கைவழி எதிர்த்துக் கொள்ளும் சூழ்நிலை தோன்றியது. (பொன்னீலன் 2003, பக் 19) ஈ.வெ.ரா. பெரியார் மற்றும் அவரது ஆதரவாளர்களால் நடுக்கம் கொண்டிருந்த ஆத்திகர்களுக்கு ஒரு துணிச்சலான தலைமையை அருள்நெறித் திருக்கூட்டம் என்ற அமைப்பின் மூலம் அடிகளார் வெளிக்காட்டினார்.

சாதீய உணர்வுகளையும் அதன் பெயரால் நடைபெற்று வந்த கொடுமைகளையும் கண்டித்தார். அன்றாட வாழ்விலும் உள்ளும் புறமும் சாதி வருண வித்தியாசம் பார்க்காதவராக விளங்கினார். சாதீய சமத்துவம் குன்றக்குடி மடத்தில் நிலவியது.

ஒரு மடாதிபதியாக இருந்துகொண்டு சாதீய ஏற்றத்தாழ்வுகளை நீக்கவும் சாதிக் கொடுமைகளுக்கு எதிராகவும் சோர்விலாது குரல் கொடுத்தார் அடிகளார்.

தமிழர் நலம் பேணுதல், சாதீய ஏற்றத்தாழ்வுகளைக் களைதல் மூட நம்பிக்கைகளை எதிர்த்தல் போன்ற முக்கிய பொது நோக்கங்களில் பெரியாரும் அடிகளாரும் ஒத்தக் கருத்துக்களைக் கொண்டிருந்ததனால் இவ்விருவரும் 1956இல் ஈரோடு சென்னியப்ப முதலியார் வீட்டில் சந்தித்து உரையாடினர். இருவருக்கும் இடையில் ஒரு பொதுவான கருத்து உருவாயிற்று. இருவருடைய நோக்கமுமே மனிதன் மீதுள்ள இழிவை அகற்ற வேண்டும் என்பதுதான் என்று கண்டுகொள்ளப்பட்டது. (தவத்திரு பொன்னம்பல அடிகளார், 2002. பக்கம் 185) எனவே அடிகளார் சமயம் சார்ந்த புரட்சி செய்வது எனவும் பெரியார் சமூகம் சார்ந்த புரட்சி செய்வது எனவும் மற்றபடி அவரவர் போக்கில் செயல்படுவது எனவும் முடிவு செய்துகொள்ளப்பட்டது. பெரியாரின் தன்னலமற்ற பொதுத் தொண்டுகள் அடிகளாரை வெகுவாகக் கவர்ந்தது. பெரியார் நாம் பெற்ற அருட்செல்வம் என்று திருச்சி பொன்மலையில் நடந்த பெரியாரின் 78வது பிறந்தநாள் விழாவிற்கு தலைமையேற்று அடிகளார் பேசினார். (பொன்னீலன், 2003, பக்கம்-50)

பெரியாரை ஆதரிக்க வேண்டிய நேரத்தில் ஆதரித்தும், எதிர்க்க வேண்டியவைகளை எதிர்த்தும் பெரியாரின் இறுதிக்காலம் வரை அடிகளார்

நட்பு பாராட்டினார். பெரியாரும் அடிகளாரும் நட்புமுறையில் பழகிவந்தாலும் தத்தம் கொள்கைகளில் உறுதிப்பாட்டுடன் திகழ்ந்தனர். கருத்துவேறுபாடுகளை மனித நேயத்துடனும் நாகரிகத்துடனும் இவர்கள் கையாண்ட விதம் போற்றுதலுக்குரியது. 1958ஆம் ஆண்டு பெரியார் குன்றக்குடி வந்தபோது அவரை அடிகளார் வழக்கமான முறைப்படியே வரவேற்றார். வரவேற்பில் பெரியாருக்கு திருநீறு அணிவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி பெரும் விவாதப்பொருளாயிற்று. இதற்குப் பெரியார் அளித்த விளக்கத்தில் அவரது பண்பு வெளிப்பட்டது. "திருநீற்றை நானாக பூசிக்கொள்ளவில்லை – ஒரு பெரியவர் – மடாதிபதி எனக்குப் பூசிவிடும் போது நான் தலையைத் திருப்பிக் கொள்வதும் வேண்டாமென்று மறுப்பதும் நாகரிகமா?" என்று கேட்டார் பெரியார். (பொன்னீலன், 2003, பக்கம்–51)

ஈ.வெ.ரா. பெரியாருடன் அடிப்படையில் கருத்து வேறுபாடுகள் கொண்டிருந்த போதும், அவரை அடிகளார் வெகுவாக மதித்துப் போற்றினரர், தமிழர்களுக்குள்ளேயே மானம், பெருமை, சிறுமை பார்க்கக்கூடாது என்ற பெரியாரின் கருத்துக்களால் தன்னுடைய வாழ்க்கையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன என்பதை அடிகளார் ஒத்துக் கொண்டார். தமிழக வரலாற்றில் அவர் விடிவெள்ளியாகத் திகழ்ந்தார் என்றும் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து கிடந்த தமிழ் இனத்திற்கு இன ஒருமைப்பாட்டைக் கற்றுத்தந்த ஆசிரியராக விளங்கினார் என்றும் பெரியாரைப் புகழ்ந்து போற்றினார். (TamilNadu Legislative Council Debates Vol CXIV, 1974 Page - 22 - 24)

1983 ஆகஸ்ட் 25இல் குன்றக்குடியில் நடைபெற்ற இராமநாதபுரம் மாவட்டச் சமய வளர்ச்சி மாநாட்டில் சாதி ஒழிப்புக்கான செயல்திட்டங்களை வகுத்தளித்தார். இத்திட்டங்களில் முக்கியமானது கூட்டுறவு அமைப்பின் மூலம் சாதி ஒழிப்புக்கு வழி காணுவது என்பதாகும். அடிகளார் சாதிய ஒழிப்புக்கு ஒரு சமூக விஞ்ஞானிக்குரிய சிந்தனை ஆற்றலுடன் திட்டம் வகுத்தார். இதனையேட்டில் மட்டும் எழுதி வைத்து நின்றுவிடாமல் அதைச் செயல்படுத்தவும் சிந்திக்கத் தலைப்பட்டார்.

– தொடரும்

விடுதலைப் போராட்டத் தியாகி ஐ.மாயாண்டிபாரதி காலமானார்!

மதுரையின் முதுபெரும் விடுதலைப் போராட்டத் தியாகியும் பத்திரிகையாளருமான ஐ. மாயாண்டி பாரதி (99) 24.2.2015இல் காலமானார். 10ஆம் வகுப்பு படிக்கும்போதே விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டார். 1931, 1932ஆம் ஆண்டுகளில் சட்ட மறுப்பு இயக்கம், கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டுச் சிறை சென்றார். 1940இல் இரண்டாம் உலகப்போர் எதிர்ப்புப் பரப்புரையில் ஈடுபட்டுக் கைதானார். 1941இல் பொதுவுடைமை அரசு வேண்டுமெனப் பரப்புரை செய்து கைதானார். 1942இல் வெள்ளையனே வெளியேறு இயக்கப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கைதாகி 1944 வரை சிறைவாசம் இருந்தார். பின்னர் பொதுவுடை இயக்கத்தில் சேர்ந்து பல போராட்டங்களில் ஈடுபட்டுச் சிறைசென்றார். தேசபக்திக் கட்டுரைகள் பல எழுதியவர். நமது ஆதீனத்தின் பால் மிகுந்த மதிப்பும் அன்பும் கொண்டிருந்தவர். இவ்வாறு வாழ்நாளெல்லாம் நாட்டுத் தொண்டாற்றிய தியாகப் பெருமகனாரின் மறைவு பேரிழப்பாகும். இவரை இழந்து துயருறும் இவர்தம் குடும்பத்தினருக்கும் அன்பர்களுக்கும் “மக்கள் சிந்தனை” ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. இவர்தம் நல்லுயிர் அமைதி பெற அஞ்சலி செய்கிறது.

– ஆசிரியர்

சிந்தனை வட்டம்

தவத்திரு பொன்னம்பல அடிகளார் எழுதிய இயற்கை வேளாண்மை பேணுவோம் என்ற கட்டுரை சீரிய சிந்தனைகளை, நாம் தற்பொழுது கடைபிடிக்கவேண்டிய வழிகளை – எதிர்கால சந்ததியினர்க்கு இயற்கையைப் பற்றி விழிப்புணர்வு உணர்த்துவதாக அமைந்துள்ளது. ஆன்மீகத் தளம் விருட்சங்களைக் கடவுளாகப் போற்றியது. இன்றைய கோயில்களில் தலவிருட்சம் படும்பாடு என்னவென்று சொல்வது. அடிகளாரின் ஆணித்தரமான கருத்துக்களுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

– ப. இராமமூர்த்தி
மும்பை

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

(உலகத் திருக்குறள் பேரவை - புதுக்கோட்டை மாவட்டக் கிளையின் சார்பில் செந்தூரான் தொழில் நுட்பக் கல்லூரியில் 3.2.2015-ஆம் நாள் நிகழ்ந்த திருவள்ளுவர் திருவிழா - பாட்டரங்கில் பாடியது.)

(புலவர். நாவை சிவம்)

அவையடக்கம்

குன்றுதோ றாடும் குமரன் தமிழ்பாடி
குன்றக் குடிஊரில் கோலோச்சி - நன்றுசெய்த
செந்தமிழ் மாமுனிவர் சீர்மைசொல வந்துள்ளேன்
முந்துகுறள் பற்றால் முனைந்து

விண்ணுயர்ந்த மாமலையாம் வீறுதமிழ் மாமுனிச்சீர்
அண்ணாந்து பார்த்தே அயர்ந்திட்டேன்! - எண்ணிஎண்ணி
நெஞ்சில் எழுந்த நினைவு சிலவுரைப்பேன்
கொஞ்சம் செவிசாய்ப்பீர் கூர்ந்து

தோற்றமும் புரட்சியும்

1. தாமரைப்பூ மொட்டைப்போல் விளங்குதலைப் பாகை!
தமிழ்மூப்பைப் போல் நரைத்துத் தொங்குகின்ற தாடி!
பூமுகத்தின் நெற்றியிலே வெண்ணீற்றுப் பூச்சு!
புன்முறுவல் தோயுமிதழ்! அருள்சொரியும் கண்கள்!
நாமகிழப் பொழியும்வாய்! துவராடை மேனி!
நலங்கொண்ட தோற்றத்தில் குறளறமாய் வாழ்ந்த
மாமுனிவர் குன்றக்குடி அடிகளெனச் சொல்வேன்!
மாத்தமிழின் சமுதாயத் தென்றலெனச் சொல்வேன்!

2. அருள்படர்ந்த சமயமெனும் உலகத்தில் வாழும்
ஆதீனத் துறவியெலாம் ஆர்ப்பரித்துக் காட்டும்
பரிவாரம் பல்லக்கு மேளதாளம் என்னும்
பயனற்ற செயற்பாட்டை உதறியெறிந் திங்கே
பொருளின்றிக் கிடக்கின்ற கடைக்கோடி மாந்தன்
புதுவாழ்வு கண்டிடவே புரட்சிசெயலாம் செய்தோர்
இருள்மாசு மனத்துக்கண் இல்லாமல் வாழ்ந்தோர்
எழிலறவோர் குன்றக்குடி தவசீலர் என்பேன்!

பிறப்பும் பணியும்

3. நடுத்திட்டு சீனிவாசன் சொர்ணம்மாள் பெற்ற
நல்லரங்க நாதனெனும் கடைக்குட்டிச் செல்வர்
மடுத்திட்ட தடைதாண்டி நல்லகல்வி கற்றார்
மாண்புடையார் வழிகாட்ட மேலுயர்ந்து சென்றார்!
துடித்த இளம் பருவத்தே துறவுநிலை பூண்டார்!
தூயபணிக் கந்தசாமித் தம்பிரானாய் ஆனார்!
எடுத்தசுடர் திருவண்ணா மலைஆதீ னத்தின்
இனியம்டம் குன்றக்குடி தலம்வந்து சேர்ந்தார்!

4. குன்றக்குடித் திருமடத்தில் நாற்பத்தி ஐந்தாய்க்
குலவுகுரு பெருந்துறவித் தலைமையினை ஏற்றார்!
நன்றருளும் தெய்வசிகா மணிப்பெயரும் பூண்டார்!
நாளடைவில் குன்றக்குடி அடிகளென வாழ்ந்தார்!
மன்றுள்ளே செய்சமயப் பணிகளுக்கு மூடே
மக்கள்சார் கோவில்கள்! கோவில்சார் மக்கள்
என்றுபுது வழிகண்டார்! வெளியுலகம் வந்தார்!
எல்லார்க்கும் எல்லாமென் றேஓங்கிச் சொன்னார்!

பூசை மொழிப்போர்

5. இறைவனுக்குப் பூசைமொழி சமற்கிருதம் என்றும்
இன்றமிழோ நீசமொழி என்றுரைத்தும் வந்த
கறைமனத்தார் செயலுக்கே எதிர்ப்புரையும் தந்தார்!
கவின்தமிழ்தான் அருச்சனைக்கே உகந்தமொழி என்றார்!
நிறைதில்லை நடவரசர் திருக்கோவி லுள்ளே
நீட்டுதமிழ்த் திருமுறைகள் ஓதுகின்ற செய்தி
பறையொலிபோல் கேளாமல் உள்செல்ல மாட்டேன்
பாரீரென அறைகூவல் அடிகளன்றோ தந்தார்!

(தொடரும்)

திருக்குறள். நாவை சிவத்திற்கு "திருக்குறள் செம்மல் விருது"

சென்னை - தமிழ் - ழகரச் சிறப்புப் பணிமன்ற 20ஆம் ஆண்டுவிழாவில் (7.02.2015) மைசூர் செம்மொழி நிறுவன மேனாள் பொறுப்பாளர் முனைவர் **க. இராமசாமி** அவர்கள்,

மணற்பாறை - திருக்குறள் பயிற்றக நிறுவுனர் திருக்குறள புலவர்.**நாவை. சிவத்திற்கு**, அவர்தம் 40 ஆண்டுகாலத் திருக்குறள் தொண்டைப் போற்றி "**திருக்குறள் செம்மல்**" என்ற விருது வழங்கினார். தேவநாதப் பாவாணர், பாவலர் எழிலரசு துணைநின்றனர்.

அன்பான வேண்டுகோள்!

சமுதாய மாமுனிவராகத் திகழ்ந்த நமது அருள்நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆழமான சிந்தனைகளை அடியொற்றி நடைபோடும் "மக்கள் சிந்தனை" மாத இதழ் மேலும் பலம் பெறுவதற்குத் தங்களின் ஆதரவு தேவை. நமது கருத்து பரவலாக மக்களைச் சென்றடைய இதழ் அவசியம்.

ஆயுள் சந்தாவாகவோ, அல்லது ஆண்டுச் சந்தாவாகவோ அல்லது புரவலர் தொகையாகவோ மக்கள் சிந்தனை இதழுக்கு வழங்கி மக்களின் சிந்தனைகளை அகம்கொண்டு வெளிவர உதவுங்கள். "மக்கள் சிந்தனை"யின் பணி சிறப்புடன் தொடர வாசகராக, படைப்பாளராக சந்தாதாரராக விளம்பரதாரராக மாறுங்கள்; இன்றே சமய சமுதாயப் பணியை வலிமைப்படுத்துங்கள்.

- **ஆசிரியர்**

தூத்துக்குடியில் பாரதியின் தேசியப் பார்வை குறித்த கருத்தரங்கம்

உலகத் திருக்குறள் பேரவை, தூத்துக்குடிக் கிளையின் சார்பில் பாரதியின் தேசியப் பார்வை குறித்த கருத்தரங்கம் சி.எம்.மேனிலைப் பள்ளியில், காமராஜ் கல்லூரியின் முன்னாள் இயற்பியல் துறைப் பேராசிரியர் கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

திருக்குறளில் – "விருந்தோம்பல்" எனும் அதிகாரத் தலைப்பில் திருக்குறள் மோ. அன்பழகன் உரையாற்றினார்.

பாட்டுக்கொரு புலவன் பாரதியின் தேசியப் பார்வை குறித்து காமராஜ் கல்லூரி முன்னாள் கணிதத்துறைப் பேராசிரியர் குமரிக் கண்ணன், பாரதியின் தெய்வீகம் பற்றி, பாபநாசம் திருவள்ளுவர் கல்லூரியின் முன்னாள் முதல்வர் கவிஞர். ச. சவகர்லால், பாரதி கண்ட புதுமைப்பெண் குறித்து ஆசிரியர் திருமதி.ஆ. சுந்தரி ஆகியோர் உரையாற்றினார்கள்.

ஆசிரியர் மனோ சேவியர் நன்றி கூறினார்.

கருத்தரங்கில், இயற்கை நல வாழ்வு பேச்சாளர் மு. ஜெயதர்மர், இஞ்சினியர் ஞா. தபராசு, ஆசிரியர் வளர்மதி, வணிகர் அண்ணாமலை, செல்வி சூரியலெட்சுமி மற்றும் பேரவை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

– மோ. அன்பழகன்

மகாசந்நிதானம் குன்றக்குடி மடாதிபதி அவர்களுக்கு வணக்கத்துடன் தஞ்சாவூர் சோமசுந்தரம் எழுதியது.

8.3.2015 தஞ்சாவூர் திருக்குறள் பேரவையில் நீங்கள் ஆற்றிய உரை மிகவும் சிறப்பானது.

அலெக்சாண்டர், நாரதர், பாம்பு ஆகியோர் உவமையும் திருக்குறள் விளக்கம் அருமை.

இன்னும் உரையாற்றமாட்டீர்களா என்ற எதிர்பார்ப்புடன் மக்கள் இருந்தனர்.

மகிழ்ச்சி. நன்றி! – சோமசுந்தரம்

உ



குன்றக்குடி

அருள்தரு சண்முகநாதப்பெருமான் திருக்கோயில்

பங்குனி உத்தரப் பெருந்திருவிழா

முக்கிய நிகழ்ச்சிகள்

25.3.2015 புதன்	கொடியேற்றம்
26.03.2015 வியாழன்	2 ஆம் திருநாள் (வெள்ளிக்கேடகம்)
27.03.2015 வெள்ளி	3 ஆம் திருநாள் (வெள்ளிக்கேடகம்)
28.03.2015 சனி	4 ஆம் திருநாள் (வெள்ளிக்கேடகம்)
29.3.2015 ஞாயிறு	5 ஆம் திருநாள் (திருக்கல்யாணம்) (பூப்பல்லக்கு)
30.03.205 திங்கள்	6 ஆம் திருநாள் (ருத்ராட்சக் கேடகம்)
31.3.2015 செவ்வாய்	7 ஆம் திருநாள் (தங்கரதம்)
01.4.2015 புதன்	8 ஆம் திருநாள் தெப்பம் (வெள்ளிரதம்)
02.4.2015 வியாழன்	9 ஆம் திருநாள் (திருத்தேர்) பிற்பகல் 4.00 மணிக்கு வடம் பிடித்தல்
03.4.2015 வெள்ளி	பங்குனி உத்திரம் (அக்கினிக்காவடி)

குன்றக்குடி வருக! குமரன் அருள்பெறுக!

உ
சிவமயம்



தெய்வப்பழநியில் புகழ்பெற்றது
பழநி
பரிமள விலாஸ்
S.சித்தநாதன்

ஜவ்வாது வாசனை விபூதி
&
ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்

வாங்கி உபயோகியுங்கள்

Prop : S. சித்தனாதன் சன்ஸ்
அடிவாரம், பழநி - 624 601.

போன் கடை : 242405 வீடு & ஸ்டோர் : 242406

மக்கள் கல்வி நிலையம்

(மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு)

குன்றக்குடி - 630 206

Phone: 04577 - 264567 Mobile : 94433 64200

குன்றக்குடி மக்கள் கல்வி நிலையம், கிராமம் மற்றும் நகர்ப்புற மக்களுக்கு கீழ்க்கண்ட தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கிவருகிறது. பயிற்சி நிறைவு பெற்றபின் சான்றிதழ்களும், தொழில் துவங்க ஆலோசனைகளும் வழங்கப்படும். சுய உதவிக் குழுக்கள், கிராமப்புற மக்கள், இளைஞர்கள், பெண்கள் அனைவரும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இயக்குநர்

மக்கள் கல்வி நிலையம், குன்றக்குடி

பயிற்சிகள் (TRADES)

1. தையல் பயிற்சி, 2. அழகுக்கலை, 3.லெதர் & ரெக்ஸின் பொருட்கள் தயாரித்தல், 4. பற்றவைப்பு (ஆர்க் & கேஸ் வெல்டிங்), 5.செல்போன் பழுது நீக்குதல், 6. T.V, Radio- பழுது நீக்குதல், 7. எம்ப்ராய்டரி 8. பனை ஓலைப் பொருட்கள் தயாரித்தல், 9.வீட்டு வயரிங் வேலை செய்தல், 10. இரண்டு சக்கர வாகனம்பழுது நீக்குதல், 11. ஆபரண நகை தயாரித்தல், 12. திரை அச்சு வேலை, 13. சேலை டிசைனிங், 14. கைவினைப் பொருட்கள் தயாரித்தல், 15.பொம்மைகள் தயாரித்தல், 16. காகித உறை மற்றும் பைகள் தயாரித்தல், 17. வீட்டு உபயோகப்பொருட்கள் பழுது நீக்குதல், 18. உணவுப் பொருட்கள் தயாரித்தல், 19. பேப்ரிக் பெயிண்டிங், 20. சாக்பீஸ், மெழுகுவர்த்தி, பினாயில், சாம்பிராணி தயாரித்தல் 21. கயிறு திரித்தல், 22. GFRB பொருட்கள் தயாரிப்பு, 23. சேலை புதுப்பித்தல் சுருக்கம் நீக்குதல், 24. எலக்ட்ரானிக் சோக் தயாரித்தல், 25. கூடை முடைதல், 26.உல்லன் நிட்டிங் 27. நாப்கின் தயாரித்தல், 28. தையல் இயந்திரம் பழுது நீக்குதல், 29. போட்டோ லேமினேசன், 30. ஐஸ்கிரீம் தயாரித்தல் 31. காளான் வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல்,

தகுதி	:	தன்முனைப்பு, தன் ஆர்வம் மட்டும்.
பயிற்சி நேரம்	:	பயிற்சி நாள்தோறும் இரண்டு மணி நேரம் மட்டும். ஒன்றுக்கும் மேற்பட்ட பயிற்சிகளில் சேரலாம்.
குறிப்பு	:	ஒவ்வொரு பயிற்சிக்கும் பயிற்சி நிறைவு பெற்றபின் தேர்வின் அடிப்படையில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

Carry your Bank Wherever you go



IND NET BANKING

- Viewing Balance / Transaction enquiry for all your accounts / download of statement
- Funds transfer within Bank's own branches & to other banks' branches through NEFT
- Payment of Direct and Indirect taxes
- Payment of Donations / Utility bills for various billers across India
- Cheque realisation status enquiry
- Viewing Demat Account

IND PHONE BANKING

- Balance enquiry
- Statement of account by fax
- Issued / deposited cheque status enquiry
- Change of phone banking PIN

ATM

- Anytime Cash
- Balance enquiry
- Mobile top-ups
- Mini statement of account
- Payment for Kingfisher Air Tickets
- ATM cum Debit Card can be used for purchase of merchandise / services at point of sale globally

IND CORP NET BANKING

- Balance / Transaction enquiry for all your accounts
- Funds transfer within Bank's own branches & to other banks' branches through RTGS / NEFT
- Cheque realisation status enquiry
- Viewing / download of statement of account
- Ensures multi level user authentication of transactions
- Flexible enough to cater to the needs of small and big corporates
- Payment of MCA 21/ Direct and Indirect Taxes

IND MOBILE BANKING

- Balance / Transaction enquiry view
- Cheque realisation status enquiry
- SMS Alerts
- Funds transfer upto Rs.5,000 per day
- Statement of account view for the last 3 transactions

Reserve Bank of India Guidelines from time to time are applicable for all Schemes.
For latest guidelines / other charges visit us @ www.indianbank.in or the nearest Indian Bank branch

- H.O.: 66, Rajaji Salai, Chennai 600 001
- Toll Free No.: 1800 425 1400
- Email : indbank@vsnl.com

इंडियन बैंक
Indian Bank
Taking Banking Technology to the Common Man

www.indianbank.in

BOOK POST

Book pocket containing printed matter

MAKKAL CHINTHANAI-February 2015

Price Rs. 8-00

Date of Publication 28-2-2015

பெறுநர்

திரு

திருவருள்திரு சுவாமிகள் அவர்கள்,
கோவிலூர் ஆதீனம்,
கோவிலூர்,
மானகிரி-(அஞ்சல்),
காரைக்குடி-(வழி).

அவர்கள்

அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ✆ : 264166